Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 159
செவ்வாய்க்கிழமை
சித்திரை 21 ஆம் நாள்
04 மே 2021
வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## ரயில் சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, மே 4
கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக வடக்குக்கான இரு ரயில் 18

# வடக்கில் அவசரகதியில் கொரோனா விடுதிகள்!

- யாழ். போதனா மருத்துவமனையில் தயார்
- ஏனையவற்றில் நடவடிக்கைகள் ஆரம்பம்
- தொற்றாளர் அதிகரிப்பால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 4
கட்டுக்கடங்காமல் கொரோனா தீவிரமாகப் பரவி வரும் நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இரண்டு விடுதிகள் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பு நிலையமாக மாற்றப்பட்டுள்ளன. 18

## யாழ். போதனா கட்டில்களை கணக்கெடுத்தது இராணுவம்

யாழ்ப்பாணம், மே 4
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலுள்ள கட்டில்கள் தொடர்பான விவரங்கள் இராணுவத்தினரால் கணக்கெடுக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.
ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஆயிரம் கட்டில்கள் கொரோனா நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு பிரதான மருத்து 18

## கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொலிஸாருக்கும் கொரோனா

கிளிநொச்சி, மே 4
கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை 18

## பிரதேச சபை உறுப்பினர் உட்பட வடக்கில் 14 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், மே 4
வடக்கு மாகாணத்தில் நேற்று 14 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடத்தில் நேற்று 404 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 18

## ஊடகங்களின் பாதுகாப்பை உறுதி செய்தாராம் மஹிந்த!

கொழும்பு, மே 4
சுயாதீனமான மற்றும் பொறுப்பான ஊடகப் பாவனையே காலத்தின் தேவையாகும். நாம் அதிகாரத்தில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் தகவல் அறியும் உரிமையையும், ஊடக சுதந்திரத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.
இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 18

## நேற்று 1,913

கொழும்பு, மே 4
நாட்டில் நேற்று மட்டும் ஆயிரத்து 913 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று கொரோனா ஒழிப்புச் செயலணி 18

## தாமதத்தால் பெரும் ஆபத்து ஏற்படும் என எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், மே 4
நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில் கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுக்க முடியாது 18

## பொலிஸாக நடித்து 30 பவுண் நகை அபேஸ்

வவுனியா, மே 4
வவுனியாவின் இரு வேறு இடங்களில் பொலிஸ் என்று தங்களை அடையாளப்படுத் 18

## 35 கிலோ கஞ்சா பதுக்கிய 20 வயது இளைஞன் கைது



யாழ்ப்பாணம், ஏப்.4
கஞ்சாவை வீட்டில் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் பருத்தித்துறையில் 20 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர் நேற்றுக் காலை பருத்தித்துறை, இன்பசிட்டியில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், சந்தேகநபரிடம் இருந்து 35 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. 18

## இலங்கைக்கு படையெடுக்கும் சீன பிரமுகர்கள்

கொழும்பு, மே 4
சீன வெளிவிவகார அமைச்சர் வாங் இ அடுத்த மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று இராஜதந்திர மட்டத்திலான தகவல் வெளி 18

## போலி 1000 ரூபா தாள்கள் கிளிநொச்சியில் சிக்கின

### சந்தேகநபர் ஒருவர் கைது



கிளிநொச்சி, மே 4
கிளிநொச்சி, சாந்தபுரத்தில் போலி ஆயிரம் ரூபா நோட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 18

## வடக்கு மீள்குடியமர்வுக்காக மூவர் செயலணி நியமனம்!

கொழும்பு, மே 4
வடக்கில் மீள்குடியேற்ற வசதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக மூவர் கொண்ட செயலணி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. கிராமிய அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ச இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார். அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களால் இலங்கைக்கு ஆபத்து

### கொரோனா பெருந்தொற்று தாண்டவமாடுமென சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, மே 4**

**கடல் மார்க்கமாக இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதைத் தடுக்காவிடில், பெரும் நெருக்கடிகளை நாடு எதிர்கொள்ளும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் அநாவசியமாக இலங்கைக்குள் பிரவேசிக்கின்றனரா என்பது தொடர்பில் கடற்படை மற்றும் பொலிஸார் மிக அவதானத்துடன் கண்காணிக்க வேண்டும். இந்த விடயத்தில் விசேட அவதானத்துடன் செயற்படாவிட்டால், எதிர்வரும் நாள்களில் தற்போதுள்ளதை விட நாட்டில் சுகாதாரத்ணாதுறை பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். இந்தியப் மீனவர்கள் உலகின் ஏனைய நாடுகளுக்கு பரவலாகச் செல்கின்றனர். இலங்கை மிகவும் அபாய கட்டத்திலுள்ள நாடாகும். கடல் மார்க்கமாக பெரும்பாலான இந்திய மீனவர்கள் அநாவசியமாக நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இந்தியப் பிரஜைகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதன் மூலம் பிறிதொரு வைரஸ் பரவ ஆரம்பித்தால் நாம் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். எனவே இந்திய பிரஜைகள் என்று சந்தேகிக்கின்ற எந்தவொரு நபரையும் அடையாளம் காணும் பட்சத்தில், அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது சுகாதாரத் தரப்பினருக்கு அறிவிக்குமாறு மீனவர்களிடமும், கடற்கரையை அண்மித்த பிரதேசங்களில் வாழும் மக்களிடமும் கேட்டுக் கொள்கின்றோம். என்றார். (ம-4)

# ஒட்சிசன் சிலிண்டர்கள் போதுமானவை இருப்பில்

### *தேவையெனில் இறக்குமதியாகும் என்கிறார் அமைச்சர் அழகப்பெரும*



கொழும்பு, மே 4

நாட்டின் மருத்துவமனைகளில் ஒட்சிசன் சிலிண் டர்களுக்குப் பற்றாக்குறையில்லை. தற்போதைய தேவைக்குப் போதுமான அளவு ஒட்சிசன் சிலிண்டர்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் தேவையேற்படின், சிங்கப் பூரில் இருந்து ஒட்சிசன் சிலிண் டர்களை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று மின்சாரத் துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொவிட்19 வைரஸ் தாக்கம் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், மருத்துவமனைகளில் ஒட்சிசன் சிலிண்டர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று சமூக வலைத் தளங்களில் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு போலியான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. நாட்டில் இரண்டு பிரதான நிறுவனங்கள் மருத்துவத் துறைக்குத் தேவையான ஒட்சிசன் சிலிண்டர்களை உற்பத்தி செய்கின்றன.

தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி இவ் இரண்டு நிறு வனங்களிடமும் உற்பத்தி தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கையைக் கோரினார். இவ்விரு நிறுவனங்களும் மருத்துவத் துறைக்கு ஒரு நாளைக்குத் தேவையான 22 ஆயிரம் லீற்றர் ஒட்சிசன் சிலிண்டர்களை சாதாரண தேவைக்காக உற்பத்தி செய்கின்றன.

தற்போது அந்த உற்பத்தி 67 ஆயிரம் லீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது. நாடு தழுவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகளில் 15 ஆயிரம் லீற்றர் ஒட்சிசன் சிலின்டர்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே ஒட்சிசன் சிலிண்டர்களுக் குப் பற்றாக்குறை ஏற்படவில்லை.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது. தேவையாயின் சிங்கப்பூரில் இருந்து ஒட்சிசன் சிலிண்டர்களைத் தேவையான அளவு மேலதிகமாக இறக்குமதி செய்யுமாறு ஜனாதிபதி உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அவசர சிகிச்சைப் பிரிவு கட்டில்கள் தொடர்பிலும் மாறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கொவிட்19 வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை வெற்றிகொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. எனவே சுகாதாரத் தரப்பினரது அறிவுறுத்தல்களை அனைவரும் முழுமையாகப் பின்பற்றுவது அத்தியாவசிய கடமையாகும் - என்றார். (ம-4)

## ஆளுங்கட்சியின் முக்கிய இரு கூட்டங்கள் இன்று

கொழும்பு, மே 4

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டமும், அரச பங்காளிக்கட்சித் தலைவர்களின் கூட்டமும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. இதன்படி நாடாளுமன்றக் குழுக் கூட்டம், நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கொழும்பு துறைமுக நகர சட்டவரைபு உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன. அதன்பின்னர் ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சித் தலைவர்கள் கூட்டம் மாலை 6 மணிக்கு அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது. (ஐ-44)

## கொரோனாத் தொற்று 50 வயதுக்கு மேற்பட்ட 596 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மே 4

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் 50 வயதுக்கு மேற்பட்ட 596 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன. இதன்படி 51-60 வயதுக்கிடைப்பட்ட 97 பேரும், 61-70 வயதுக்கிடைப்பட்ட 175 பேரும், 71 வயதுக்கு மேற்பட்ட 324 பேரும் பலியாகியுள்ளனர். அத்துடன் 10 முதல் 30 வயதுக்கிடைப்பட்ட 10 பேரும், 31 - 40 வயதுக்கிடைப்பட்ட 20 பேரும், 41 - 50 வயதுக்கிடைப்பட்ட 56 பேரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். (ம-44)

## கொரோனா தாண்டவம்: முடக்கங்கள் நீள்கின்றன

கொழும்பு, மே 4

நாட்டில் மேலும் 8 கிராம அலுவலர் பிரிவுகள் நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. வேகமாகப் பரவிவரும் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி நுவரெலியா மாவட்டத்தில் ரத்மெடிய கிராம அலுவலர் பிரிவும், களுத்துறை மாவட்டத்தில் பின்வத்த மேற்கு, நாரான்பிடிய மற்றும் பண்டாரகம கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும், கொழும்பு மாவட்டத்தில் உக்கல்ல கிராம அலுவலகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் திஸ்ஸ வீரசிங்கம் சதுக்க கிராம அலுவலர் பிரிவும், கம்பஹா மாவட்டத்தில் அல்விஸ் வத்த கிராம அலுவலர் பிரிவும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி நாட்டில் கடந்த 21ஆம் திகதி முதல் நேற்றுவரை 73 கிராம அலுவலர் பிரிவுகளும், 6 பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (ம-ஐ-44)

## பனிப்போரை விடுத்து மக்களைக் காப்போம்

### *சஜித் அழைப்பு*

கொழும்பு, மே 4

அரசுக்குள் காணப்படும் பனிப்போரைக் கைவிட்டு, கொவிட் வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க உலகின் செல்வந்த நாடுகளின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும் இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சர்வதேச தூதுவர்களுடனான சந்திப்பில் கொவிட்-19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இலங்கையின் மருத்துவ கட்டமைப்புக்கு வழங்கப்படக் கூடிய அதிகபட்ச மருத்துவ உபகரணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம். அத்தோடு தனிப்பட்ட ரீதியில் தொலைபேசியில் தொடர்புகொண்டு இலங்கைக்கு அத்தியாவசிய தேவையாகக் காணப்படுகின்ற தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிக்கை விடுத்தோம். குறுகிய நேரத்தில் அதிகளவான பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுப்பதற்கு உகந்த பி.சி.ஆர். இயந்திரத்தைப் பெற்றுக்கொடுக்குமாறும் கோரியுள்ளோம்.

எமது பிரதான இலக்கு சகல மக்களையும் கொவிட் பாதிப்பிலிருந்து காப்பாற்றுவதாகும். இதன் மூலம் அரசியல் இலாபம் பெறுவது எமது எதிர்பார்ப்பல்ல. எனவே தற்போது அரசுக்குள் காணப்படும் பனிப்போரைக் கைவிட்டு மக்கள் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்க முன்வர வேண்டும். என்றுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தென்மராட்சி பிரதேச செயலக

# சகல அலுவலர்களுக்கும் நிலவேம்பு கசாயம்

**சாவகச்சேரி, மே 4**

**தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்களுக்கு நேற்றுத் தொடக்கம் நிலவேம்பு கசாயம் வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.**

பிரதேச செயலக அலுவலர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து செயலக திட்டமிடல் கிளை மூடப்பட்டு அங்கு கடமையாற்றிய அனைத்து அலுவலர்களும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பிரதேச செயலரின் ஏற்பாட்டில் கொடிகாமம் ஆயுள்வேத மருந்தகத்தால் வழங்கப்பட்ட 'நிலவேம்பு பொடி' பிரதேச செயலக ஆயுள்வேத அபிவிருத்தி அலுவலரால் கசாயமாகத் தயாரிக்கப்பட்டு அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலக அலுவலர்களின் நலன்கருதி ஏற்கனவே தனது பெற்றோரின் நினைவாக செயலக அலுவலர் ச.நரேந்திரன், மின்சாரத்தில் இயங்கும் ஆவி பிடிக்கும் இயந்திரம் ஒன்றை வழங்கியிருந்தார். அதன் மூலமாக அலுவலர்கள் ஆவி பிடித்துவரும் நிலையில், தற்போது நிலவேம்பு கசாயம் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. (த-9)

## கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு யாழ்.ஊடக அமையத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 4

சர்வதேச ஊடக சுதந்திர தினமான நேற்று, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு யாழ். ஊடக அமையத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்தோடு கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களையும் நினைவுகூர்ந்ததுடன், கொரோனாப் பெரும் தொற்றிலிருந்து மக்கள் மீண்டு வரவேண்டும் எனவும் பிரார்த்திக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியினருடன் அஞ்சலி நடைபெற்றது. (த-20)

## 70 கர்ப்பிணிகளுக்கும் தொற்றியது கொரோனா!

### குழந்தைகளையும் விட்டுவைக்கவில்லை

கொழும்பு, மே 4

கொவிட்19 தொற்றுறுதியான 70 கர்ப்பிணித் தாய்மார்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சமுதாய சுகாதார மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வரையில், கொவிட்19 தொற்றுறுதியான 70 கர்ப்பிணித் தாய்மார்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

கொரோனா அச்சமான நிலை நீடிப்பதால், கர்ப்பிணித் தாய்மார்கள் இயன்றளவு தமது பயணங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவ நிபுணர் அறிவுறுத்துகின்றார். பிறந்து ஒரு மாதம் தொடக்கம் 6 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கும் கொவிட்19 தொற்றுறுதியாகியுள்ளது. மூச்சுத்திணறல் உட்பட நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் வீடுகளில் இருப்பார்களாயின் அவர்களுக்கு அருகில் குழந்தைகள் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். என்றும் மருத்துவ நிபுணர் தெரிவித்துள்ளார். (த-இ)

## ரஷ்யத் தடுப்பூசிகள் 15,000 இலங்கைக்கு!

கொழும்பு, மே 4

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி கொவிட் தடுப்பூசியின் முதல் தொகுதி நேற்றிரவு இலங்கையை வந்தடையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது அதனடிப்படையில் முதல் தொகுதியில் 15 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (த-இ)

## பூஜித், ஹேமசிறி மீது 800 குற்றச்சாட்டுக்கள்

கொழும்பு, மே 4

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பில், சட்டமா அதிபர் திணைக்களம் 800 குற்றச்சாட்டுக்கள் சுமத்தி மேல் நீதிமன்ற வழக்கில் குற்றச்சாட்டுப் பத்திரம் சமர்ப்பித்துள்ளது. குறித்த குற்றச்சாட்டுக்களை இரண்டு விஷேட நீதிமன்றங்களில் சட்டமா அதிபர் முன்வைத்துள்ளார்.

கொலை, கொலை முயற்சி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் அவற்றில் உள்ளடங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## வீணாகிப்போன தடுப்பூசிகள்!

கொழும்பு, மே 4

இரண்டாம் கட்டமாக தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ள நிலையில், 570 பேருக்கு ஏற்றக்கூடிய கொவிட் தடுப்பூசி மருந்து, அநியாயமாக வீணாகிப் போன சம்பவமொன்று கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது.

அதிகாரிகளின் அசமந்த போக்கால், அவை வீணாகிப்போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் மருத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட தடுப்பூசிகள், மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஏற்றும் நடவடிக்கை கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அந்தச் செயற்பாடு, மாலை 5 மணியுடன் நிறைவடைந்தது. அதில், மருந்து நிரப்பப்பட்ட 57 குப்பிகளை குளிர்சாதனப் பெட்டியில் வைக்காமல், வெளியிலேயே வைத்துவிட்டு சென்றுவிட்டனர். நேற்றுமுன்தினம் காலையில், ஏனையோருக்கு தடுப்பூசி எற்றுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், குளிர்தானப் பெட்டியில் வைக்கப்பட வேண்டிய தடுப்பூசி மருந்துகள் வெளியிலேயே இருந்துள்ளன. அவை சுமார் 15 மணித்தியாலங்களுக்கு மேல் வெளியில் வைக்கப்பட்டிருந்ததால், குறித்த தடுப்பூசி மருந்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

## 'இனப்படுகொலை' என கரித்துக்கொட்டாதீர்கள்

### மனோ கணேசன் எம்.பி. விசனம்

கொழும்பு, மே 4

புதிய தமிழக அரசை பார்த்து, "இனப்படுகொலை" என கரித்துக்கொட்டி, இனி மேலும், எல்லோரையும் பகையாளி ஆக்கி ஓலமிட நான் தயார் இல்லை. அப்படி ஓலமிடுபவர்களுக்கு என்னிடம் இடமுமில்லை என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.

தனது முகப்புத்தகப் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பதிவில்,

நமக்கு, தமிழக இந்திய தி.மு.க. பற்றி தெரியும். அப்படியே அ.இ.அ.தி.மு.க., பி.ஜே.பி., காங்கிரஸ், நாம் தமிழர், பா.ம.க., ம.தி.மு.க., வி.சி.க. பற்றியும் தெரியும். அங்கே மாநில கட்சிகளுக்கு இருக்கின்ற அரசியல் அதிகாரம் பற்றியும் தெரியும். இலங்கை முழுக்க செயற்படும் தமிழர், முஸ்லிம் கட்சிகளையும் தெரியும். நமது ராஜதந்திர அரசியல்வாதிகளையும் தெரியும். 2005இல் முதன் முறையாக எப்படி மஹிந்த வென்றார் என்றும் தெரியும். ரணில் எப்படி தோற்றார் என்றும் தெரியும். பிறகு, இறுதிப் போர் எப்படி நடந்தது என்பதும் தெரியும். அப்பாவி மக்கள், எப்படி கொல்லப்பட்டார்கள் என்றும் தெரியும். பிறகு, 2010இல் மஹிந்த எப்படி மீண்டும் வென்றார் என்றும், இறுதிப் போர் நடத்திய ராணுவம் தளபதி சரத் பொன்சேகா தேர்தலில் வேட்பாளரானதும், அவருக்கு தமிழ் மக்கள் வாக்களித்ததும் தெரியும்.

ஆயுத வரலாறு முழுக்க நிகழ்ந்த படுகொலைகளையும், சகோதரப் படுகொலைகளையும் தெரியும். போர் நடத்திய கட்சி சார்பாக நேரடியாகவே தமிழ் எம்.பிக்கள், தேர்தலில் வாக்குப் பெற்று, தெரிவாகி, இன்றைய இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தில் என்னுடன் இருப்பதும் தெரியும். நான் நேற்று பிறக்கவில்லை. இவற்றையெல்லாம் கடந்துதான், இன்றைய வரலாற்று திருப்பத்தில் நிற்கின்றேன்.

இந்தநிலையில், இன்று எட்டு கோடி தமிழர்களை ஆள தமிழக மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதல்வரையும், அவரது அரசையும் எப்படி எமக்காக பயன்படுத் [illegible] என்றுதான் நான் பார்க்கிறேன். வாழ்த்துகிறேன். - என்றுள்ளது. (த-இ)

## தொடர்ந்தும் ஏமாற்றப்படும் சுகாதாரத் தொண்டர்கள்!

யாழ்ப்பாணம், மே 4

கடந்த இரண்டு மாதங்களாக நியமனம் பெற்றுக்கொள்ள வேண்டும் எனும் நோக்குடன் சுகாதாரத் தொண்டர்கள் வடக்கு ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு வந்தனர். இந்தநிலையில் கடந்த 28ஆம் திகதி ஜனாதிபதியின் செயலரைச் சந்தித்த சுகாதாரத் தொண்டர்களிடம், 3 ஆம் திகதி (நேற்று) வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் நிரந்தர நியமனம் பெறுவதற்கான திகதி அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதியின் செயலர் உறுதியளித்திருந்தார் என்று சுகாதாரத் தொண்டர்கள் ஊடகங்கள் ஊடாக கடந்த சில தினங்களுக்கு முன் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் நேற்று ஆளுநர் அலுவலகம் முன்பாக சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்துக்கான திகதியை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். எனினும், திகதி எதுவுமே தெரிவிக்கப்படவில்லை.

இது தொடர்பில் நியமனத்தில் உள்ளீர்க்கப்படாத சுகாதாரத் தொண்டர்களுக்கும் ஒரே தடவையில் நியமனம் வழங்கப்பட்ட வேண்டும் என்ற கோரிக்கை போராட்டத்தில் ஈடுபடாத ஏனைய சுகாதாரத் தொண்டர்களால் முன்வைக்கப்பட்டது.

நீண்ட காலமாக 826 சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தைக் கோரியுள்ள நிலையில் பகுதியளவில் நியமனம் வழங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்தச் செயற்பாடு சுகாதாரத் தொண்டர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. எனவே தமது நியமனத்தை முழு நேர நியமனமாக வழங்க வேண்டும் என்று சுகாதாரத் தொண்டர்கள் கோருகின்றனர். (த27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷாத்தை விடுவிக்கக்கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

**வவுனியா, மே 4**
**நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வவுனியாவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



வவுனியா புதியசாளம்பைக்குளம் பள்ளிவாசலுக்கு முன்பாக நேற்று முன்தினம் இந்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
ஆர்ப்பாட்டக்காரர்கள், 'யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கைது?', 'சர்வதேச உறவுகளே அவரின் விடுதலைக்காய் குரல்கொடு', 'சிறுபான்மைத் தலைமைகளை விடுதலை செய்', போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிந்தனர். கோசங்களையும் எழுப்பினர்.
'அரசு தன்னுடைய தோல்வியை மறைப்பதற்காக இவ்வாறான கைதுகளை முன்னெடுத்து வருகின்றது. ரிஷாத் அமைச்சராக இருந்து பல்வேறு அபிவிருத்திகளை வன்னியில் முன்னெடுத்தவர். எனவே அவர் விடுதலை செய்யப்பட வேண்டும். நாட்டின் ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்' என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ம-4,110)

## இறுதிச் சடங்குக்கு 24 மணி நேரமே!

கொழும்பு, மே 4
ஒருவர் உயிரிழந்தால் 24 மணி நேரத்துக்குள் இறுதிக் கிரியைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
கொரோனாத் தொற்று அல்லாத உயிரிழப்புகளுக்கே இந்த நடைமுறை என்றும் கூறப்பட்டுள்ளது.
அத்துடன் இறுதிச் சடங்குக்கு ஆகக் கூடியது 25 பேர் மாத்திரமே கலந்துகொள்ள முடியும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ.இ)

## தொடர்ச்சியான பரிசோதனையால் சிறைக் கொத்தணி கட்டுப்பாட்டில்

*சிறைச்சாலை ஆணையாளர் தகவல்*

கொழும்பு, மே 4
சிறைச்சாலைகளுக்குப் புதிதாக வருபவர்கள் மற்றும் சிறைக்கைதிகளுக்கு தொடர்ச்சியாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படுவதால், சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றாளர்கள் குறைவடைந்துள்ளனர் என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும், சிறைச்சாலை ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.
கொரோனாத் தொற்று சிறைச்சாலைகளுக்குள் பரவாமல் தடுப்பதற்காக சிறைச்சாலை சுகாதாரப் பிரிவு மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து விசேட வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர். அதனால் சிறைச்சாலைகளில் வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



## பஸ் விபத்தில் இருவர் காயம்

திருகோணமலை, மே 4
திருகோணமலை ஹொரவப்பொத்தான பிரதான வீதியின் பம்மதவாச்சி பகுதியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பல்கலைக்கழக மாணவர்களை ஏற்றுவதற்காக சென்ற தனியார் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. விபத்து தொடர்பில் விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## ரிஷாத்தை விடுவிக்கக்கோரி கல்முனையில் ஆர்ப்பாட்டம்

கல்முனை, மே 4
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை விடுவிக்குமாறு கோரி, கல்முனை மாநகரில் பெரும் ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.
இதில் அம்பாறையின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் பங்கேற்றனர்.
ரிஷாத்தை அநீதியான முறையில் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்திருக்காதே!, ரிஷாத்தை நள்ளிரவில் கைதுசெய்ததன் பின்னணி என்ன?, யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கைது? போன்ற சுலோக அட்டைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.
அந்தச் சுலோகங்களைப் பறித்த பொலிஸார், போராட்டக்காரர்களுக்கு கட்டாய பி.சி.ஆர். பரிசோதனையும் செய்தனர்.
கல்முனை பொலிஸாரின் கெடுபிடியால் அங்கிருந்து வெளியேறிச் சென்ற போராட்டக்காரர்கள், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளியில், சமூக இடைவெளிகளைப் பேணி போராட்டத்தைத் தொடர்ந்தனர். (ம-4)

## ஹரின் பெர்னாண்டோவுக்கு அறுவை சிகிச்சை நிறைவு

கொழும்பு, மே 4
ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கு மேற்கொள்ளப்பட்ட இதய அறுவைசிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.
இது தொடர்பில் அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.
சிக்கலான சத்திர சிகிச்சை மேற்கொண்ட பிரபல இருதய நோய் மருத்துவர் கோத்தபாய ரணசிங்கவுக்கும், எனக்காகப் பிரார்த்தனை செய்து, சமயக் காரியங்களில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன் என்று அவர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ம-4)

# அசேல சம்பத் தாக்கப்பட்டாரா? விசாரணைகளை மேற்கொள்க!

*பொலிஸ்மா அதிபரிடம் சிறைச்சாலைகள் திணைக்களம் வேண்டுகோள்*

கொழும்பு, மே 4
சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் சிறைச்சாலைக்குள் வைத்து தாக்கப்பட்டார் என்று கூறப்படும் விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரிடம் தெரிவிக்கவுள்ளோம். இவ்வாறு சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் கடந்த மாதம் 13ஆம் திகதி கைது செய்யப்பட்டு, அந்த மாதம் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இதன்போது கடந்த மாதம் 20ஆம் திகதி சிறைச்சாலை அதிகாரிகள் தன்னைத் தாக்கினர் என்று அவர் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்டு சிறைக் கைதிகளைப் பாதுகாக்கும் அமைப்பால் எமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.
இது தொடர்பில் கவனம் செலுத்திய சிறைச்சாலைகள் தலைமையகம், சிறைச்சாலையின் உதவி அதிகாரியிடமும் போகம்பர சிறைச்சாலை யின் அதிகாரி ஒருவரிடமும் மேற்படி விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவித்திருந்தது. அதற்கமைய அசேல சம்பத் என்ற நபரை சிறைக்குள் வைத்து தாக்கியதற்கான எந்தவித தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை. எனினும், 25ஆம் இலக்க அறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் சிலர் 29ஆம் அறையில் இருந்ததன் காரணமாக அவர்களைத் தங்களுக்கு உரிய அறையில் இருக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகள் அறிவுறுத்தினர் என்று மட்டுமே தெரியவந்துள்ளது.
அசேல சம்பத் என்ற நபர் கடந்த மாதம் 26ஆம் திகதி வரையிலும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.
அதன்போது அவர் இது தொடர்பில் எவ்வித முறைப்பாடும் அளித்திருக்கவில்லை. 26ஆம் திகதி பிணையில் சென்ற பின்னர் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இதன் பின்னரே அவர் சிறைச்சாலைக்குள் வைத்து தாக்கப்பட்டார் என்று செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.
இதனைத் தொடர்ந்து அசேல சம்பத்தை வாக்குமூலம் வழங்குவதற்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்த போதிலும், அவர் இதுவரையில் வாக்குமூலம் வழங்குவதற்கு வரவில்லை. சிறைக் கைதிகளைப் பாதுகாப்பும் அமைப்பின் தலைவருக்கு நான்கு தடவைகள் தொலைபேசி ஊடாக அறிவித்திருந்த போதிலும் அவரும் வருகை தரவில்லை.
இது போன்ற பரப்புரைகளால் சிறைச்சாலைகள் மீதான நம்பிக்கையில் பாதிப்பு ஏற்படும். அதனால் இதன் உண்மை நிலைவரத்தை நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டியது அவசியமாகும். இந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரிடம் தெரிவிக்க எதிர்பார்த்துள்ளோம்- என்றார். (ஒ.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அரவணைப்போம் பலம்பெறுவோம்!

தமிழக சட்டமன்றத் தேர்தல் பரபரப்புக்கள் நிறைவடைந்திருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியமைத்திருக்கின்றது. சுமார் 10 ஆண்டுகளால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுச்சியில் அஸ்தமித்திருந்த உதய சூரியன் தற்போது மீண்டும் தன் கதிரொளியைப் பரப்பியிருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்ட மு.க.ஸ்டாலின் எதிர்வரும் 7ஆம் திகதி பதவியேற்கின்றார்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியமைத்துள்ள போதிலும், அ.தி.மு.க. பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்று சொல்லுவதற்கில்லை. அ.தி.மு.கவுக்கு இருந்த எதிர்ப்பலையை இறுதிக் காலத்தில் சிறப்பாகச் சமாளித்ததன் விளைவாக அந்தக் கட்சிக்கு சிறு பின்னடைவே ஏற்பட்டிருக்கின்றது. சீமானின் நாம் தமிழர் கட்சி சுமார் 30 லட்சம் வாக்குகளைக் கைப்பற்றி மூன்றாவது பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.


இன்னும் சொல்லப்போனால் சீமானின் எழுச்சியே அ.தி.மு.கவின் வீழ்ச்சி. ஏனெனில் நாம் தமிழர் கட்சியும், கமலின் மக்கள் நீதி மய்யமும் முன்னெடுத்த பரப்புரைகள் யாவும் ஆட்சியதிகாரத்தில் இருந்த அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கவின் இருப்பைப் பலவீனமாக்கும் விதத்திலேயே அமைந்திருந்தன. ஆக, ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும் அ.தி.மு.கவுக்குக் கிடைத்தது ஒரு கௌரவத் தோல்வியே. அது ஒரு பலமான எதிர்க்கட்சியாகவே இனி இருக்கப்போகின்றது.

ஈழத்தமிழர்களில் ஒரு பகுதியினரும், புலம்பெயர் தமிழர்களில் பெரும்பான்மையினரும் சீமானின் ஆட்சி அமைவதையே விரும்பினார்கள். ஈழத்தமிழர்களின் விடயத்தில் அவருக்கு இருக்கும் புரிதல் மற்றும் பற்று ஆகியவை காரணமாகவும், இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் செய்த துரோகங்கள் மற்றும் வரலாற்றுத் தவறுகள் காரணமாகவும் மூன்றாம் தெரிவொன்றும் மாற்றுத் தலைமையொன்றும் தமிழர் தாயகத்துக்குத் தேவைப்பட்டது என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆனால், ஒரு தரப்பை வெறுமனே நம்பி இன்னுமிரு பெரும்பான்மைத் தரப்புக்களும் பகைத்துக்கொள்ளுதல் ஈழத் தமிழர்களுக்கான ஆரோக்கிய எதிர்காலத்துக்கு வழியை ஏற்படுத்ததாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்காலத்தில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் தவறுக்குக் காரணமாக இருந்த கருணாநிதி இப்போது உயிருடன் இல்லை. அதுபோன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இழைத்த துரோகத்துக்குக் காரணமாக ஜெயலலிதாவும் தற்போது உயிருடன் இல்லை. அந்தக் கட்சிகள் மட்டுமே தற்போது எஞ்சிநிற்கின்றன. இவ்வாறிருக்கையில் நாம் பழைய பகையை - துரோகத்தை - வரலாற்றுத் தவறை நினைந்து, அந்தத் தரப்புக்களை பகைத்துக் கொள்ளுதல் ஆகாது.

ஆட்சியில் எவர் இருந்தாலும், ஈழத் தமிழர்களுக்கும் சோழத் தமிழர்களுக்கும் இடையிலான பிணைப்பு என்பது தவிர்க்க முடியாதது. அதை எமது தரப்பில் இருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு பலப்படுத்த வேண்டும். 'கடந்த காலங்கள் கடந்தே போகட்டும்' என்ற அடிப்படையில் ஆட்சி யமைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், பலமான எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அரவணைக்க வேண்டிய தேவை எமக்குள்ளது.

'அரவணைப்போம் பலம்பெறுவோம்'.



# யாசகம் பெறுவதற்காக குவிகின்றனர் பெண்கள்

## கட்டுப்படுத்துமாறு கிளி. வர்த்தகர்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, மே 4**

**யாசகம் பெறுவதற்கு கிளிநொச்சியில் குவியும் வெளி மாட்டங்களைச் சேர்ந்த பெண்களைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் நகரப் பகுதி வர்த்தகர்கள் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியாவில் இருந்தும், வவுனியாவுக்கு அப்பால் வெளி மாவட்டங்களிலிருந்தும் ஒரு தொகை பெண்கள் யாசகம் பெறும் நோக்கில் கிளிநொச்சி நகரப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுச்சந்தை பகுதிகளுக்கு வந்து, வர்த்தகர்களிடமும் பொது மக்களிடமும் யாசகம் பெறுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். தற்போது நாடளாவிய ரீதியில் கொரோனா தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்தப் பதற்றமான சூழ்நிலையில் பாதுகாப்பு நடைமுறைகளைக் கருத்தில் கொள்ளாது ஒரே நேரத்தில் பெருமளவான யாசகர்கள் கிளிநொச்சி நகரப்பகுதிக்கு வருகின்றனர். அவர்களில் கொவிட் தொற்றாளர்களும் இருக்கலாம். எனவே அவ்வாறு வெளிமாவட்டங்களில் இருந்து யாசகம் பெறுவதற்கு வரும் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது அவர்கள் பாதுகாப்பு நடைமுறைகளை உரியமுறையில் கடைப்பிடிப்பதற்கு ஏற்ற வகையில் சுகாதாரத்துறையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (ப-12)

# யாழ். செயலர் கலந்துகொண்ட நிகழ்வில் ஒருவருக்கு தொற்று

சாவகச்சேரி, மே 4

தென்மராட்சி பிரதேச செயலக அலுவலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த அலுவர் கலந்து கொண்ட நிகழ்வு ஒன்றில் யாழ்.மாவட்டச் செயலர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பங்கு பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கடந்த வாரம் தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்கள் உட்பட அரச அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட இரண்டாம் மொழிக் கல்வி பயிற்சி வகுப்பு நிறைவு விழாவும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் வரணி மத்திய கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. விழாவில் 50 பேர் மட்டும் பங்குபற்ற சுகாதாரப் பகுதியினர் அனுமதி வழங்கியிருந்தனர். நிகழ்வில் அரச மொழிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம், திணைக்கள அத்தியட்சகர்,யாழ். மாவட்டச் செயலாளர், பிரதேச செயலர் உட்பட்ட பலர் கலந்துகொண்டனர். நிகழ்வில் 115 பயிலுநர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் நிகழ்வில் பங்குபற்றியோரில் 25 பேருக்கு எழுமாற்று பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் ஒருவருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்து அவர் கடமையாற்றும் திட்டமிடல் அலகு மூடப்பட்டு அங்கு கடமையாற்றிய 20க்கும் மேற்பட்ட அலுவலர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ப-9)

# விடுதலைப்புலிகளை உருவாக்க முயற்சியாம்

## செங்கலடியில் ஒருவர் கைது

மட்டக்களப்பு, மே 4

விடுதலைப் புலிகளை, முகநூல் வாயிலாக புதுப்பிக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில், தமிழர் உனர்வாழ்வு அமைப்பின் தலைவர் க.மோகன் கைதுசெய்யப்பட்டுள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், மட்டக்களப்பு செங்கலடியில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர் முகநூல் வழியாக விடுதலைப் புலிகளை மீண்டும் உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 3 மாதங்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கான நீதிமன்ற அனுமதியுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகர சட்டவரைவு அவசர விவாதம் எதற்கு?

## சந்தேகம் வெளியிட்டது எதிர்க்கட்சி



**கொழும்பு, மே 4**

**நாட்டுக்கு முக்கியத்துவமுடையதும், சிக்கலுக்குரியதுமான கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு, இவ்வளவு அவசரமாக நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவது ஏன்? இந்த விவாதத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாள்களேனும் ஒதுக்கப்பட வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருண தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஹர்ஷண ராஜகருண இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

அடுத்த வாரம் நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளன. இதன்போது கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது. எனினும் இந்த விவாதத்தை இவ்வளவு அவசரமாக நடத்த வேண்டாம் என்று அரசிடம் கோரினோம். ஒரே நாளில் இந்த விவாதத்தை நிறைவடைச் செய்ய வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளோம். இந்தச் சட்ட வரைவு தொடர்பில் இதுவரையில் நீதிமன்றால் சபாநாயகருக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை.

துறைமுக நகர அபிவிருத்தியை நிறுத்தும் எண்ணமோ, எதிர்பார்ப்போ எதிர்க் கட்சிக்குக் கிடையாது. எனவே இதனை வெற்றிகரமான அபிவிருத்தித் திட்டமாக மாற்றுவதற்கு அது குறித்த சட்டவரைவுக்கு அதிகளவான காலத்தை ஒதுக்கி, விவாதங்களில் ஈடுபட்டு ஜனநாயக ரீதியில் செயற்படுமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் பரவல் நிலைமையைப் பயன்படுத்தி, அரசு தனக்குத் தேவையான விடயங்களை நாட்டு மக்களுக்குத் தெரியாமல் நிறைவேற்றிக்கொள்வதற்குப் பயன்படுத்திக்கொள்கிறது - என்றார். (ம-4)

# திலும் அமுனுகமவுக்கு மேலும் ஒரு இராஜாங்க அமைச்சு




கொழும்பு, மே 4

வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுக்கு மேலும் ஒரு இராஜாங்க அமைச்சு பதவி .வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி முன்னிலையில் அவர் பதவியேற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# வசந்தகாலக் கொண்டாட்டம்; பொலிஸாருக்கு கொரோனா!



நுவரெலியா, மே 4

நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் பெண் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பொலிஸ் நிலையத்தில் மக்களுக்கான சேவைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு மட்டும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. தொற்றாளர்கள் நுவரெலியா வசந்தகாலக் கொண்டாட்டங்களில் கடமையில் ஈடுபட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# துறைமுக நகர சட்ட வரைவை தாமதமின்றி நிறைவேற்றவேண்டும்

*ஜனக்க திஸ்ஸகுட்டியராச்சி எம்.பி தெரிவிப்பு*

கொழும்பு, மே 4

கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார ஆணைக்குழு தொடர்பான சட்ட வரைபு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதை ஒருநாள் கூட தாமதிக்க முடியாது என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக்க திஸ்ஸ குட்டியராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான சட்ட வரைபைக் கொண்டு வந்து துறைமுக நகரத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பதே பிரதான விடயம். ஏன் இதனைத் தாமதிக்க வேண்டும்? எமது நாட்டில் கொரோனா நிலைமையை ஓரளவுக்கேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்லும் இரண்டு திருப்புமுனைகள் பற்றி அண்மைக் காலத்தில் பேசியதை நாம் நினைவுபடுத்த வேண்டும். இந்த கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார ஆணைக்குழு திட்டத்தின் ஊடாக இலங்கை, சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்று மாறுவதை நிறுத்த முடியாது - என்றார். (ம-ப)

# விமர்சிப்பதை விடுத்து உண்மையை கூறுங்கள்

## ஊடகங்களிடம் ஜனாதிபதி கோரிக்கை

விமர்சனங்களைப் பரப்பி, மக்களைக் குழப்புவதை விடுத்து உண்மைச் செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதே ஊடகங்களின் பணியாக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அனைத்துலக ஊடக சுதந்திர நாளை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

உண்மைச் செய்திகளை மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பது மட்டுமே ஊடகங்களின் பணி அல்ல. உண்மையற்ற செய்திகளை மக்களுக்குள் பரப்பி, குழப்ப நிலைகளை ஏற்படுத்துவதையும் ஊடகங்களே பொறுப்புடன் தடுக்க வேண்டும். இன்று நாடு சந்தித்துள்ள பெரும் சுகாதார நெருக்கடியான காலகட்டத்தில், அவ்வாறு செயற்படுவதே ஊடகங்களின் பெரும் பொறுப்பாகவும் இருக்க முடியும்.

நிறைவுகள் தொடர்பாகப் பேசுவதைத் தவிர்த்து, குறைகளை மட்டுமே கேள்விக்கு உட்படுத்தி, ஒரு நாட்டையும் அதன் மக்களையும் திறம்பட நிர்வகித்துச் செல்வதில் அரசு சந்திக்கும் சவால்களை விமர்சிப்பது அல்லாமல், மக்களை நல்வழிப்படுத்திச் செல்வதில் அரசுக்கு ஆக்கபூர்வமான உறுதுணையாகவும் ஊடகங்களே திகழ வேண்டும். அவையே, ஊடக சுதந்திரம் என்பதன் உள்ளார்ந்த அர்த்தம் ஆகும். எமது நாட்டில் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அரசு உறுதிப்பாட்டோடு உள்ளது- என்றார். (ம-4)

# வீரியம் கூடிய வைரஸால் நாட்டுக்குப் பெரும் சவால்

## எம்மை நாமே பாதுகாப்போம் என்கிறார் மருத்துவ அதிகாரி

அம்பாறை, மே 4

தற்போது வீரியம் கூடிய கொரோனா வைரஸ் நாட்டுக்குப் பெரும் சவாலை உருவாகியுள்ளது. எனவே சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டுப்பாடுகளை கண்டிப்புடன் பின்பற்றி, எம்மை நாமே பாதுகாக்க வேண்டும். இவ்வாறு, நிந்தவூர் சுகாதார மருத்துவ அதிகாரி பரூஸா நக்பர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது அண்டை நாடான இந்தியாவில் பெரும் அவலங்களை ஏற்படுத்தி கொரோனா வைரஸ் பரவல் கோரத்தாண்டவமாடி வருகின்றது. இந்த நிலையில் எமது நாட்டிலும் வீரியம் கொண்ட கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாம் அலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த வைரஸ் பரவல் எமது பிரதேசங்களையும் ஆக்கிரமிக்காது இருக்க முன்கூட்டியே பாதுகாப்பு வழிமுறைகளை நாம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். முதலில் எம்மை நாமே தொற்றிலிருந்து பாதுகாப்பதுடன், பிரதேசத்தையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டும்.

பல்லின சமூகங்கள் வாழும் இந்த நாட்டில் பிறப்பிக்கப்படும் சட்ட திட்டங்கள் மற்றும் பொதுவான வழிமுறைகளை நாமும் பின்பற்றி நல்லிணக்கத்துடன் வாழ்வதுடன், அவற்றுக்கான ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

சுகாதாரத் திணைக்களத்தின் பங்களிப்பு மட்டுமிருந்து இந்தக் கொடிய வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. முக்கியமாக பொதுமக்கள் இந்த அபாய நிலையை உணர்ந்து பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார். (ம-4,30)

# விபத்தில் மூவர் படுகாயம்

பதுளை, மே 4

பவுசர் ஒன்று ஓட்டோவுடன் மோதியதில் ஓட்டோவில் பயணித்த மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகி, தியத்தலாவை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று பண்டாரவளை - ஹப்புத்தளை பிரதான வீதியில் ககாகொல்லை என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமுற்ற மூவரில் இருவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பில் ஹப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மோ.போ.திணைக்கள சேவைகள் முடக்கம்

கொழும்பு, மே 4

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் நாராஹென்பிட்ட மற்றும் வேரஹெர காரியாலயங்களின் ஊடாக வழங்கப்படும் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த அலுவலகங்களால் முன்னெடுக்கப்படும் சேவைகள் ஒரு வாரத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன. எனவே முற்பதிவு செய்து கொண்ட சகல பதிவுகளும், இதன் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட நடவடிக்கையில் பொலிஸார் தீவிரம்

மன்னார், மே 4

நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் மாவட்ட ரீதியில் கொரோனா பரவலைத் தடுக்கும் முகமாக மன்னார் மாவட்டத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத பொதுமக்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக மன்னார் பொலிஸார் சட்ட நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

முகக்கவசம் அணியாமல் நடமாடுதல், சமூக இடைவெளியைப் பின்பற்றாது செயற்படுதல் மற்றும் கிருமி தொற்று நீக்கிகளை விசிறாது சுகாதார நடை முறைகளை பின்பற்றாத வர்த்தக நிலையங்கள் என்பவை மீது மேற்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்று திங்கட்கிழமை காலை தொடக்கம் மன்னார் பஸார் பகுதியில் பொலிஸார் இணைந்து விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் அடிப்படையில் அரசால் வெளியிடப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் பொது இடங்களில் நடமாடிய நபர்கள் மீதும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கண்காணிப்பு நடவடிக்கை மன்னார் பஸார் பகுதி, பஸ் நிலையம் உட்பட மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-56)

# 25 வீத மானியத்தில் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்.குடாநாட்டில் விவசாயிகளிடையே பெரிய வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு செய்கையாளர்களுக்கு 25 வீத மானிய விலையில் சொட்டு நீர்ப்பாசனத்துக்கான உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

அராலி கோப்பாய் புத்தூர் மற்றும் உரும்பிராய் போன்ற பிரதேசங்களில் கூடுதலான விவசாயிகள் பெரிய வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த பெரிய வெங்காயச் செய்கை அதிக வெற்றியளித்துள்ளது.

இதனை அடுத்து விவசாயிகள் பலர் இச் செய்கைக்கு ஆர்வம் காட்டியுள்ளனர். இச் செய்கைக்கான சொட்டு நீர்ப்பா சனத்துக்குரிய உபகரணத் தொகுதிகள் மானிய விலையில் செய்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ப-17)

# மீன் சந்தைகளில் சுகாதார நடைமுறையில்லை

யாழ்ப்பாணம், மே 4

யாழ் நகரை அண்டிய பிரதான மீன் சந்தைகளில் போதிய சுகாதார விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படாமை குறித்து நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றின் வேகம் அதிகரித்துள்ள நிலையில் மீன் விற்பனைச் சந்தைகளில் சுகாதார வசதிகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவித்தனர். பாசையூர், கல்வியங்காடு, குருநகர் மற்றும் கொட்டடி போன்ற மீன் விற்பனை சந்தைகளில் மக்களின் நெரிசல் அதிகரித்துள்ளது. சமூக இடைவெளி பேணப்படுவதில்லை அத்துடன் சந்தைகளில் வியாபாரிகள் முகக்கவசம் அணியாது நின்றே மீன் விற்பனையில் ஈடுபடுவதோடு, ஏனைய சுகாதார வசதிகளும் பின்பற்றப்படு வதில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. (ப-17)

# மாகாண அலுவலகங்களின் மக்கள் சேவைகள் நிறுத்தம்


கொழும்பு, மே 4

ஆள்பதிவு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்களின் பொதுமக்கள் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மறு அறிவித்தல் வரை சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருக்குமென ஆள்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ம)




# கொரோனாவால் வெறிச்சோடிய திருகோணமலை



நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் திருகோணமலை நகர்ப் பகுதி வெறிச்சோடிய நிலையில், காணப்படுகிறது.

திருகோணமலையின் பல கிராம அலுவலர் பிரிவுகள் கொரோனாத் தொற்று அதிகரிப்பால் முடக்கப்பட்ட நிலையில் நேற்று நகர சபையால் அத்தியாவசிய பொருள்கள் வாங்கும் வர்த்தக நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவற்றைத் தவிர ஏனைய வியாபார நிலையங்களை மூடுமாறு ஒலி பெருக்கி மூலமாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ச)

# தி.மு.கவின் வெற்றி தமிழ் மக்களுக்கானது

*இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு*



கொழும்பு,மே 4

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி இலங்கைத் தமிழர்களுக்கு அர்த்தமுள்ளதாக அமையும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க உள்ளிட்ட கட்சிகளைப் பின்தள்ளி தி.மு.க. அமோக வெற்றிபெற்றுள்ளது. தி.மு.க. வெற்றிபெற்றதால் புதிய தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் தெரிவாகியுள்ளார். அவர் எதிர்வரும் 7 ஆம் திகதி முதலமைச்சராகப் பதவியேற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க ஸ்டாலின் தீர்வை வழங்க ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வு வழங்க வேண்டும்- என்றுள்ளது. (ப-4)





மன்னார் மாவட்டத்தில் மேட்டு நிலப் பயிர்களான பயறு, கௌப்பி, உளுந்து மற்றும் நிலக்கடலை போன்றவற்றை பயிரிடுவதற்காக விவசாயிகள் மிகவும் மும்முரமாக நிலங்களை தயார் செய்து வருகின்றனர். (ப-213)

# இன்றைய நாள்

**மேடம்:** இனிமையான பேச்சினால் கவர்வீர்கள். இளைஞர்கள் வெற்றியடைவர். புத்திசாலித்தனமான செயல் ஒன்றால் பாராட்டுப் பெறுவீர்கள். பிறருக்கு உதவிகளை செய்து கொடுப்பீர்கள்.

**இடபம்:** கவரும் தன்மை அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். தொலைதூரத்தில் உள்ளவர்கள் தொடர்பால் நன்மை உண்டு. அலைச்சல் அதிகரிக்கும். பணியில் வேகம் கூடும்.

**மிதுனம்:** வார்த்தையை கவனமாக பயன்படுத்தினால் பிரச்சினை இல்லை. சோர்வு குறையும். மனதாலும் யாருக்கும் தீமை நினைக்க வேண்டாம். மனதில் இருந்த கவலை ஒன்று நீங்கும்.

**கடகம்:** நண்பர்களுடன் சேர்ந்து மகிழ்வதால் மன நிறைவு ஏற்படும். வெளியிடத்தில் உணவு உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். அலுவலக வழக்குகளில் சாதகமான திருப்பம் இன்று ஏற்படும்.

**சிம்மம்:** மகிழ்ச்சியான நிகழ்வுகளால் திக்குமுக்காடுவீர்கள். பாக்கிகள் வசூலாகும். பணியிடத்தில் இருந்த அரியர் தொகைகள் திடீரென்று வரும். பணம் புரண்டு சந்தோஷம் தரும்.

**கன்னி:** பயம் நீங்கும். பிள்ளைகள் நிதானமாகத்தான் முன்னேறுவர். ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொள்ளுங்கள். பயணம் தள்ளிப்போகும். முயற்சி செய்வீர்கள்.

**துலாம்:** பிள்ளைகள் பரிசுகள் பெற்றுப் பெருமிதம் கொள்ளச் செய்வர். உடல் நலத்தில் ஒரு சில தொந்தரவுகள் ஏற்பட்டு பின் சீராகும். பழைய நண்பர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்கள் உயர் நிலை அடைய உதவுவீர்கள். பயணத்தைத் தவிர்க்கவும். மதியத்துக்க மேல் சிறப்பான பலன்களை பெற்று மகிழ்வீர்கள். தேக்க நிலை அடியோடு மாறும்.

**தனுசு:** குடும்பத்தினரின் செயல்களில் கொஞ்சம் பிடிவாதம் இருக்கும். புதிய முயற்சிகளில் உடனடியாக பலன் எதிர்பார்க்க வேண்டாம். பிறருக்கு உங்களால் நன்மைகள் ஏற்படலாம்.

**மகரம்:** பயணங்களின் போது பொருள்களை கவனமாகப் பாதுகாக்கவும். ஆரோக்கியத்தில் உஷ்ணம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும். தம்பதி இடையே ஒற்றுமை கூடும்.

**கும்பம்:** கடன்களை அடைப்பதற்கு உண்டான வழி கிடைக்கும். குடும்பத்தில் திடீர் செலவு ஏற்படும். பிள்ளைகள் உதவுவார்கள். பண வரவு தாராளமாக இருக்கும். தந்தைக்கு நன்மை உண்டு.

**மீனம்:** உறவினர்கள், நண்பர்கள் வகையில் அனுகூலம் ஏற்படும். இன்று தன்னம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பணியிடத்தில் பாராட்டு கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும்.



# கனவில் பாம்பு வந்தால்...


ஒரு சிலருக்கு பாம்பு அடிக்கடி கனவில் வந்து கொண்டேயிருக்கும். காரணம் அவர்களுக்கு ராகுதிசை, கேதுதிசை அல்லது ராகுபுத்தி, கேது புத்தி நேரமாக இருக்கலாம். கனவில் பாம்பு வந்தால் அவர்களைப் போன்றவர்களுக்கு நன்மை தான். ராகு,கேதுவுக்குரிய பரிகாரங்களை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாகச் செய்வது நல்லது.

ஒற்றை நல்ல பாம்பைக் கனவில் கண்டால் விரோதிகளால் தொல்லை உண்டாகும். இரட்டைப் பாம்புகளை கண்டால் நன்மை உண்டாகும்.

பாம்பை கொல்வதாக கனவு கண்டால் விரோதிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பாம்பு கடித்து விட்டதாக கனவு கண்டால் தனலாபம் உண்டாகும். பாம்பு விரட்டுவதாக கனவு கண்டால் வறுமை உண்டாகும். காலைச்சுற்றி பாம்பு பின்னிக்கொள்வது போல் கனவு கண்டால் சனி பிடிக்கப் போகிறது என்று பொருள்.

பாம்பு கடித்து ரத்தம் வருவதாக கனவு கண்டால் பிடித்த சனி நீங்கிவிட்டது என்று அர்த்தம்.

# திரையுலகை தாக்கும் கொரோனா



பிரபல நடிகர் பிக்ரம்ஜித் கன்வர்பால் கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். தமிழில் வெளிவந்த அஞ்சான் திரைப்படத்தில் அவர் நடித்துள்ளார். இந்திப் படங்களில் அதிகளவில் நடித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

# 'ஓடிடி'யில் வெளியாகும் 'சுமோ'




ஹோசிமின் இயக்கத்தில் உருவாகி யுள்ள 'சுமோ' திரைப்படம் ஓடிடி தளத்தில் வெளியாவது உறுதியாகியுள்ளது. 'பெப்ரவரி 14', 'ஆயிரம் விளக்கு' படங்களை இயக்கியவர் ஹோசிமின்.

நீண்ட ஆண்டுகள் கழித்து மிர்ச்சி சிவா, ப்ரியா ஆனந்த் ஆகியோர் நடிப்பில் உருவாகியுள்ள 'சுமோ' படத்தை இயக்கியுள்ளார். ஐசரி கணேஷ் தயாரித்துள்ள இந்தப் படத்தின் ஒட்டுமொத்தப் படப்பிடிப்பும் முடிந்து, இறுதிக்கட்டப் பணிகளும் நிறைவடைந்தன.

தற்போது இந்தியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் சூழலில் ஓடிடி வெளியீட்டைத் தேர்வு செய்துள்ளது 'சுமோ' படக்குழு. இந்தப் படம் நேரடியாக அமேசான் ப்ரைம் ஓடிடியில் வெளியாகவுள்ளது.

இந்தோ- ஜப்பானிஸ் படமான 'சுமோ' சுமோக்களின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட முதல் இந்தியத் திரைப்படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 2 | | 5 | | | |
| | 2 | 7 | | | | 1 | | |
| | 1 | | 7 | | | | 4 | |
| 1 | | 2 | | 7 | | | | 5 |
| | | | 8 | | 6 | | | |
| 4 | | | | 3 | | 6 | | 9 |
| 2 | 3 | | | | | 9 | 8 | |
| | | 9 | | | | 2 | | |
| | | | 9 | | 2 | | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 7 | 3 | 1 | 6 | 5 | 9 | 4 |
| 5 | 6 | 3 | 4 | 9 | 7 | 2 | 1 | 8 |
| 9 | 4 | 1 | 8 | 2 | 5 | 7 | 6 | 3 |
| 2 | 3 | 8 | 6 | 7 | 9 | 4 | 5 | 1 |
| 1 | 9 | 6 | 5 | 3 | 4 | 8 | 2 | 7 |
| 4 | 7 | 5 | 2 | 8 | 1 | 9 | 3 | 6 |
| 7 | 8 | 9 | 1 | 5 | 3 | 6 | 4 | 2 |
| 3 | 5 | 4 | 7 | 6 | 2 | 1 | 8 | 9 |
| 6 | 1 | 2 | 9 | 4 | 8 | 3 | 7 | 5 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்களும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.

# கொரோனாவைத் தடுக்க 'மாஸ்க்' போடுங்கோ என்றால்...என்னடாப்பா இது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைப்படுத்த வாய்ப்பின்றி 75,000 கிலோ பூசணிகள்!


## நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் கரைச்சி கண்ணகிபுரம் விவசாயிகள்

**கிளிநொச்சி, மே 4**

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கண்ணகிபுரம் கிராமத்தில், 75 ஆயிரம் கிலோகிராமுக்கும் மேற்பட்ட நிறையுடைய பூசணிக்காய்கள் சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நிலைமைகள் காரணமாக சந்தைப்படுத்த முடியாதுள்ளது.

இதனால் பெரும் இழப்பை எதிர்கொண்டுள்ளோம். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி



நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்குள்ள விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-214)

# உணவகங்களில் நேற்று மேற்பார்வை நடவடிக்கை



வவுனியா, மே 4

அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக வவுனியாவில் உள்ள உணவகங்களில் சிறப்பு மேற்பார்வை நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கொவிட்-19 தொற்றை அடுத்து சுகாதாரப் பிரிவினரால் உணவகங்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையுடன் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வவுனியாவில் உள்ள உணவகங்களில் கடைப்பிடிக்கப்பட்டுவரும், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்பார்வை செய்யப்பட்டது.

இதன்போது ஒவ்வொருவருக்கும் இடையில் சமூக இடைவெளிகள் இறுக்கமாகப் பேணப்படவேண்டும் என்று உணவக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், நிபந்தனைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியிருந்தனர். (ம-ஜ-110)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம் ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத தில்லை ஸ்ரீமத் நடராஜப் பெருமான் ஆலய சங்காபிஷேக உற்சவம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அடியார்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர் (ம-ச)

# பயிற்சிநெறியில் இணையலாம்

சாவகச்சேரி, மே 4

தென்மராட்சி அபிவிருத்தி கழகமும் மானிப்பாய் கிறீன் நினைவு மருத்துவமனையும் இணைந்து பராமரிப்பாளர் பயிற்சியை இலவசமாக நடத்தவுள்ளன.

பயிற்சிநெறியில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் 0772021322 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கழகச் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (ஐ-9)

# அஞ்சல் அலுவலகத்தை இடம்மாற்ற புத்துவெட்டுவான் மக்கள் எதிர்ப்பு

முல்லைத்தீவு, மே 4

முல்லைத்தீவு, புத்துவெட்டுவான் கிராமத்தில் நீண்டகாலமாக இயங்கிவரும் உப அஞ்சல் அலுவலகத்தை ஐயன்கன் குளம் கிராம பகுதிக்கு இடமாற்றம் செய்யும் நடவடிக்கையை நிறுத்துமாறு புத்துவெட்டுவான் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

நீண்டகாலமாகப் புத்துவெட்டுவான் கிராமத்தில் இயங்கிவரும் உப தபாலகத்திலேயே எமது மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துகின்றோம். அங்கேயே அரசால் வழங்கப்படும் முதியோர் கொடுப்பனவு மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு என்பவற்றைப் பெற்று வருகின்றோம்.

இந்த நிலையில் மாங்குளம் பிரதான தபாலகத்தின் அதிகாரிகளால் எமது கிராமத்தில் இருக்கும் உப அஞ்சல் அலுவலகத்தை அயற்கிராமமான ஐயன்கன் குளம் கிராமத்துக்கு மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்கு நாம் எதிர்ப்பு வெளியிட்டோம். எம் எதிர்ப்பையடுத்து அலுவலக மாற்றல் நடவடிக்கை கைவிடப்பட்ட நிலையில் மீண்டும் தற்போது உப அஞ்சல் அலுவலகத்தை ஐயன்கன் குளம் கிராமத்துக்கு இடமாற்றும் நடவடிக்கை சூட்சுமமாக மேற்கொள்ளப்படுகின்றது.

எனவே தமது கிராமத்திலுள்ள அஞ்சல் அலுவலகத்தை இடமாற்றம் செய்யும் நவடிக்கையை முற்றுமுழுதாகக் கைவிடவேண்டுமென்று உரிய அதிகாரிகளிடம் கோருகின்றோம் -என்றனர். (ப-12)

# வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றம்

## யாழுக்கு இராதாகிருஸ்ணன் வவு.வடக்குக்கு அன்னமலர்

வவுனியா, மே 4

யாழ்ப்பாணம் கல்வி வலய பணிப்பாளராக முத்து இராதாகிருஸ்ணனும் வவுனியா தெற்கு கல்வி வலய பணிப்பாளராக திருமதி அன்னமலர் சுரேந்திரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாளை 5 ஆம் திகதி தொடக்கம் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள கல்வி வலயங்களில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கும் வகையில் வடக்கு மாகாண பிரதம செயலரால் இடமாற்றக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.


இராதாகிருஸ்ணன் இறுதியாக வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் பணிப்பாளராக இருந்தார். அங்கு சுமார் நான்கரை வருடங்கள் அவர் பணியாற்றியுள்ளார்.

அவ்வாறே அன்னமலர் சுரேந்திரன், கடந்த நான்கு வருடங்களாக வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய சந்திரராஜா, கடந்த மாதம் ஓய்வுபெற்றுச் சென்றிருந்தார். அதனால், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இரவிச்சந்திரன் யாழ். கல்வி வலயத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை, மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் பிரட்லி ஜெனாட், வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்படுகின்றார்.

இவைதவிர, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய உமாநிதி புவனராஜா, கடந்த 26ஆம் திகதி ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். அந்த இடத்துக்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன் பதில் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றார். (த-110)



# கோடா, கசிப்புடன் ஒருவர் கைது

புளியம்பொக்கணை காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து ஆயிரத்து 44 லீற்றர் கோடாவும் 88 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டன என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். அவர் விசாரணையின் பின்னர் கிளிநொச்சி நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-113)

# மோட்டார் சைக்கிள் விபத்து; தம்பதியினர் மருத்துவமனையில்

மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பதியினர், தமக்கு முன்னால் பயணித்த வாகனத்துடன் மோதியதில் விபத்துக்குள்ளாகினர். இந்தச் சம்பவம் ஏ-9 வீதியில் நுணாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த கணவருக்கு கால் முறிந்ததுடன் மனைவிக்கும் உராய்வுக் காயங்கள் ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

முன்னால் சென்ற வாகனம் திடீரென நிறுத்தப்பட்டதால் அதன் பின்தொடர்ந்து சென்ற தம்பதியினர் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வயல் காணியை வழங்குங்கள்

## தென்னியங்குளத்தில் காணியற்றோர் கோரிக்கை

**முல்லைத்தீவு, மே 4**

**முல்லைத்தீவு - துணுக்காய் தென்னியங்குளம் கிராமத்தில் வயல் நிலமற்ற குடும்பங்களுக்கு வயல் நிலங்களைப் பகிர்ந்து வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்:

எமது கிராமம் அடிப்படை வசதிகளற்ற கிராமமாகவே காணப்படுகின்றது. 122 குடும்பங்கள் இக் கிராமத்தில் வாழ்கின்றன.

முழுமையாக விவசாயத்தை நம்பியே இக் குடும்பங்கள் வாழ்கின்றன. எனினும் 48 குடும்பங்கள் வயல் நிலமற்ற குடும்பங்களாகக் காணப்படுகின்றன.


இதனால் அவர்களால் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியவில்லை. எனவே அந்தக் குடும்பங்களுக்கு வயல் காணிகள் வழங்கப்பட வேண்டும். அத்தோடு எமது கிராமத்தில் யானைகளின் தொல்லை காணப்படுகின்றது. யானைகள் குளத்தின் அணைக் கட்டுக்கு இரவுவேளைகளில் வருவதால் குளத்தின் அணைக்கட்டு சேதமடைகின்றது. துணுக்காயில் இருந்து அம்பலப்பெருமாள்குளம் வரை தனியார் பஸ் சேவை நடைபெறுகின்றபோதிலும் இச்சேவை ஒழுங்கற்றதாகவே காணப்படுகின்றது.

தென்னியங்குளம் கிராமத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தூரம் நடந்து தென்னியங்குளம் சந்தியில் பஸ்ஸுக்காக காத்திருந்தாலும் பஸ் வருகை தராததால், பயணங்களை நிறுத்தி ஏமாற்றத்துடன் கிராமத்துக்கு திரும்பும் நிலையும் ஏற்படுகின்றது.

இதேவேளை தென்னியங்குளம் கிராமத்தில் இருந்து பதினைந்து கிலோமீற்றர் தூரத்தில் கிளிநொச்சி - முழங்காவில் கிராமத்துக்கான வீதியைச் சீரமைத்துத் தரும்படி கடந்த பத்தாண்டுகளாக கோரிக்கை விடுத்தும் குறித்த வீதி சீரமைக்கப்படவில்லை.

வீதி சீரமைக்கப்பட்டால் தென்னியங்குளம் கிராம மக்கள் முழங்காவில், மன்னார், பூநகரி போன்ற இடங்களுக்கு இலகுவாகப் பயணிக்க முடியும் -என்றனர். (ப-13)

## ஊசி போட்டவரையே ஊடுருவித் தாக்கியது கொரோனாத் தொற்று



வவுனியா, மே 4

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நோயாளர் காவு வண்டியின் சாரதியாக பணிபுரியும் ஊழியருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த குறித்த சாரதியிடம் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. அதன் முடிவுகள் நேற்றுமுன்தினம் கிடைக்கப்பெற்றன.

அதனடிப்படையில் குறித்த சாரதிக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவர் வவுனியாவில் கொரோனாத் தொற்று உறுதியாகும் நோயாளர்களை, கொரோனா மருத்துவமனைக்கு ஏற்றிச்செல்லும் பணியில் ஈடுபட்டிருந்ததுடன், கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸை ஜனவரி மாதமும், இரண்டாவது டோஸை நேற்றுமுன்தினமும் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-110)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு புதிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே 4

வலிகாமம்- தென்மெற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளராக (பதில்) வை.தர்சினி நியமனம் பெற்றுள்ளார்.

வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் நீண்டகாலமாக உதவித் திட்டமிடல் பணிப்பாளராக இருந்து பன்முகப் பணிகளை 25 கிராம அலுவலர் பிரிவுக்கும் முன்னெடுத்த அலுவலரே இவ்வாறு இடமாற்றம்பெற்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில், தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இதேவேளை வலி தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் 28 கிராம அலுவலர் பிரிவுக்கும் பணியாற்றிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர் என். சர்வேஸ்வரன் யாழ் பிரதேச செயலாளர் பிரிவுக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (ப-50)

# கமக்கார அமைப்பிடம் சிறுபோகச்செய்கை; விவசாயிகளின் ஒருமித்த முடிவே இது

## புதிய ஐயன்குளம் கமக்கார அமைப்பு தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 4

கிளிநொச்சி, மலையாளபுரம், புதிய ஐயன்குளத்தின் கீழான நடப்பாண்டுக்கான சிறுபோகச் செய்கையை கமக்கார அமைப்புக்கு வழங்குவது என்பது மலையாளபுரம் விவசாயிகளுடைய ஒருமித்த முடிவே என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த புதிய ஐயன்குளம் கமக்கார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.


கமக்கார அமைப்பிடம் சிறுபோகச் செய்கையை வழங்கியது தொடர்பில் அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சிலர் விசனமடைந்துள்ளனர் என்று வெளியான செய்தி தொடர்பிலேயே கமக்கார அமைப்பினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

எமது குளத்தின் தற்போதைய நீர் மட்டத்துக்கு அமைய பத்து தொடக்கம் பதினைந்து ஏக்கர் மட்டுமே பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும். இதற்கமைய 80 பயனாளிகள் கொண்ட எமது அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் 1/8 பங்கு ஏக்கர் வீதம் 10 ஏக்கர் வரை பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும் என்ற தகவலை பிரதேச செயலாளர் பெரும்போக உத்தியோகத்தர், தொழில்நுட்ப காணி உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் ஆகியோர் கலந்துகொண்ட சிறுபோகக் கூட்டம் ஒன்றின்போது தொழில் நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்திருந்தார்.

எனினும் விவசாயிகள் 1/8 ஏக்கர் பங்கில் தம்மால் பயிர்ச்செய்கை மேற்கொள்வதில் எந்தவித பயனும் இல்லை எனக் கூறினர். அதன் பின்னர் காலபோக விவசாய தேவைக்காக விதை நெல் தேவையை கருத்திற்கொண்டு விவசாயிகளின் தீர்மானத்துக்கு அமைவாக கமநல திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் கமக்கார அமைப்பு இவ்வாண்டுக்கான சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்று சபையோரால் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் அனைவருடைய ஏகோபித்த முடிவின் அடிப்படையில் கமக்கார அமைப்பே சிறுபோகச் செய்கையை முன்னெடுக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. மலையாளபுரம் கிராமத்துடன் தொடர்பில்லாத தனி நபர் ஒருவரே இது தொடர்பில் விசனித்துள்ளார் என்று தெரியவருகிறது. அவர் சிறுபோக நடவடிக்கைகளுக்கு பெரும் இடையூறுகளையும் விளைவித்து வருகின்றார். அவர்மீது சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனைத்து விவசாயிகளும் இந்தச் சிறுபோகச் செய்கைக்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர் -என்றனர். (ப-ஐ)



## விபத்தில் ஒருவர் காயம்

காரும் சைக்கிளும் மோதியதில், சைக்கிளில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் ஏ-9 வீதி தேங்காய் எண்ணெய் மில்லடி சந்தியில் நேற்று திங்கட்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

கொடிகாமத்தில்

## மேலும் 154 பேருக்கு பி.சி.ஆர். சோதனை

கொடிகாமம், மே 4

கொடிகாமம் சந்தைப் பகுதியில் நேற்று திங்கட் கிழமை காலை மேலும் 154 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொடிகாமம் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறாததையடுத்து கொடிகாமம் நகரின் வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுச்சந்தை என்பவை தொடர்ந்து மூடப்பட்டு காணப்படுகின்றன. (ச-159)

# ஏ-9 வீதியில் சிரமதானம்

சாவகச்சேரி, மே 4

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரும் தென்மராட்சி படையணிகளும் இணைந்து இன்று எழுதுமட்டுவாழ் தொடக்கம் நாவற்குழி வரையான ஏ- 9 வீதியில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

தற்போது பெய்து வரும் மழையால் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ள நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி தேவை

வடமாகாணத்தில்
கடற்கரையோரத்தில் 40 ஏக்கருக்கு
மேற்பட்ட காணி தேவை.
076 207 8289, 076 582 1456


# பயணிகளை வழிமறித்து யானைகள் தாக்கும் அபாயம்

## திருமுறிகண்டி அக்கராயன் வீதியில் இந்த நிலை



முல்லைத்தீவு, மே 4

முல்லைத்தீவு, திருமுறிகண்டியில் இருந்து கிளிநொச்சி- அக்கராயன் செல்லும் வீதி தற்போது பயணிப்போருக்கு ஆபத்தான வீதியாக மாறியுள்ளது என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மேற்படி வீதியால் செல்வோர் தெரிவிக்கையில், திருமுறிகண்டியில் இருந்து அக்கராயன் வரையான வீதி பத்து கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டது.

வீதியின் இரு புறமும் வீதியை மூடுமளவுக்கு பற்றைகள் வளர்ந்திருப்பதால் காட்டில் இருந்து வரும் யானைகளை போக்குவரத்தில் ஈடுபடுபவர்களால் இலகுவில் இனங்காண முடியாத நிலைமை காணப்படுகின்றது.

திடீரென யானைகள் வீதியில் வருவதால் பயணத்தில் ஈடுபடுபவர்கள் யானைகளின் தாக்குதலுக்கு ஆளாகும் அபாயம் காணப்படுகின்றது. அக்கராயன் குளத்தின் சூழலில் இருந்து யானைகள் அடிக்கடி வீதியைக் கடக்கின்றன. குறித்த வீதியின் இருபுற பற்றைகளையும் துப்பரவு செய்வதற்கு வீதியுடன் தொடர்புடைய திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறித்த வீதியை கிளிநொச்சி மேற்கில் காணப்படும் கிராமங்களின் மக்கள் பயன்படுத்துகின்றனர். கிளிநொச்சி பிரதேச மருத்துவமனையின் அம்புலன்ஸ் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்குச் செல்வதற்கு இவ் வீதியே பயன்படுத்தப்படுகின்றது. முல்லைத்தீவு அமைதிபுரம் கிராம அலுவலர் பிரிவு மக்கள் பஸ் சேவை இல்லாததால் ஆறு கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து சென்று திருமுறிகண்டியிலேயே பஸ்களில் பயணிக்கின்ற நிலையில் மாலை 4 மணிக்குப் பின்னர் யானைகள் குறித்த வீதியில் நடமாடி மக்களை அச்சுறுத்தி வருகின்றன. எனவே இவ்வீதியின் இருபுற பற்றைகளையும் அகற்றி, தூரத்திலேயே யானைகளை இனங்காண்பதற்கு தொடர்புடைய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (ப-13)


## மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 02 . 1964



மறைவு
28 . 04 . 2021

### சின்னத்துரை சூரியகுமார்

தண்ணீர்தாழ்வு கட்டுவனைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Bourges ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சூரியகுமார் கடந்த 28.04.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை சின்னத்துரை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் நடராசா - பவளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சினி (அமுதா) அவர்களின் அன்புக் கணவரும், துவாரகா, கஜேந்திரன், துசியந்தியா, கஜனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவநீதன், பமேலா, மத்தியூ ஆகியோரின் பாசமிகு மாமனும், ரஞ்சினி (ஜேர்மனி), ஜெயக்குமார் (சுவிஸ்), லலிதாதேவி (பிரான்ஸ்), நந்தினி (இலங்கை), பாமினி (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அகிலன் (ஜேர்மனி), சாந்தரூபன் (பிரான்ஸ்) மற்றும் சாந்தகௌரி (சுவிஸ்), அருள்நேசன் (பிரான்ஸ்), சிவானந்தன் (இலங்கை), வரதராஜன் (சுவிஸ்), றஞ்சனா (ஆசிரியை - ஏழாலை மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மெலினா, மெலனி, மெல்வினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2021) செவ்வாய்க்கிழமை அவரது (பிரான்ஸ்) இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

தகவல்:
S.நந்தினி (சகோதரி)



## மரண அறிவித்தல்

மண்ணில்
12 . 12 . 1935



விண்ணில்
27 . 04 . 2021

### திருமதி சிதம்பரம் செல்லையா (பொன்னம்மா)

யாழ்.சாவகச்சேரி கைதடியைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரம் செல்லையா அவர்கள் 27-04-2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் கண்ணாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்லையா (கனடா) (ஓய்வுபெற்ற பொலிஸ் சாஜன்) அவர்களின் அன்புத் துணைவியும், சிறிஸ்கந்தராசா (பேராசிரியர்- ரெக்சாஸ்), சிறிறஞ்சனதேவி (கைதடி), சிறிறமணி (நியுயேர்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நமசிவாயம் (கனடா), வேலாயுதர், இராசம்மா, செல்வராசா (சிட்னி), காலஞ்சென்றவர்களான நடராசா, செல்வரத்தினம், இலக்குமணன் (சின்னையா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விக்னேஸ்வரி, கண்மணி, உஷாதேவி, இராஜரட்ணம், தங்கரதினம் (லண்டன்) காலஞ்சென்றவர்களான ஞானசோதி, கதிர்காமு, சிறிரஞ்சனசதேவி, சுப்பையா, ஆகியோரின் மைத்துனியும், கோகிலா (கனடா), பொன்னுத்துரை (கைதடி), சிறிதரன் (நியுயேர்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வாணி (நியுயோர்க்), மதன்(கனடா), ஆகியோரின் அப்பம்மாவும், ஆதித்தன் (நியுயேர்சி), அபிறாம் (நியுயேர்சி) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் பூதவுடல் **05.05.2021 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு** (கனடா நேரம்)
**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada**
தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் மகள் : பொன்னுத்துரை சிறிறஞ்சனதேவி (கைதடி)
தொ.பே: 0778970509


# வட்டுவாகல் பாலத்தின் அடைப்புகளை நீக்குவது நந்திக் கடலைத் துப்பரவு செய்வதாக அமையாது

## முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவிப்பு



முல்லைத்தீவு, மே 4

வட்டுவாகல் பாலத்தின் அடைப்புகளை நீக்குவது நந்திக் கடலைத் துப்பரவு செய்வதாக அமையாது என முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 2010ஆம் ஆண்டில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திடம் நந்திக் கடலைத் துப்பரவு செய்து தரும்படி திட்டமொன்று கையளிக்கப்பட்டது. அத் திட்டத்தில் வட்டு வாகல் பாலத்தை சீரமைத்தல் அல்லது புதிய இடத்தில் அமைத்தல் மற்றும் தற்போது வட்டுவாகல் பாலத்தில் இருந்து வற்றாப்பளை செல்லும் பக்கமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு நந்திக் கடலில் உள்ள சேற்றை அகற்றித் தருக ஆகிய கோரிக்கைகள் அத்திட்டத்தில் கோரப்பட்டிருந்தது.

போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகள் கரைந்து நந்திக் கடலில் சேறாக மாறி உள்ளமை,முத்துஐயன் கட்டுக் குளத்தின் நீர் நந்திக் கடல் வழியாக வெளியேறுவதால் நந்திக் கடலின் ஆழம் குறைந்தமை, நந்திக் கடல் கோடை காலங்களில் வேகமாக வற்றிவிடும் தன்மை ஆகியவை காரணமாக நந்திக் கடலில் உள்ள சேற்றை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

ரூபா 2 இலட்சம் வரையான நிதியைப் பயன்படுத்தி வட்டுவாகல் பாலத்தின் அடைப்புகளை நீக்கியதால் நந்திக் கடலின் துப்பரவுப் பணிகளின் முதலாம் கட்டம் நிறைவு பெற்றுவிட்டது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. நந்திக் கடலின் துப்பரவுப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. நந்திக் கடலில் உள்ள சேற்றை அகற்றுவதன் மூலம் நந்திக் கடலின் கடல்வாழ் உயிரினங்களின் பெருக்கம் அதிகரிக்கும். நந்திக் கடல் இலகுவில் வற்றாது என்பதே முடிவாக உள்ளது.

நந்திக் கடலின் துப்பரவுப் பணிகளை விரைவாக முன்னெடுப்பதற்கு கடற்றொழில் அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான இடைக்கால கேள்வி அறிவித்தல் - 2021

சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக்கடைகளினை 2021 ஆம் ஆண்டின் குறிக்கப்பட்ட காலத்திற்கு (01.06.2021 - 31.12.2021) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 05.05.2021 – 13.05.2021 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 13.05.2021 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 13.05.2021 பி..ப 02.00 மணி

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "சந்தைகள், இறைச்சிக் கடைகள் இடைக்கால கேள்வி கோரல் - 2021" என எழுதி மூலப்பிரதியை **"தவிசாளர் / செயலாளர், வலி கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** எனும் முகவரிக்கும். இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் எதிர்வரும் 13.05.2021 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ.அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

**கேள்விப்பத்திரங்கள், நிபந்தனைகளை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | இடைக்கால கேள்வித் தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 500.00 | 25000.00 | 5,836,250.00 | |
| 02 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 156,360.00 | |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 192,020.00 | |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 01 | கோப்பாய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 345,635.00 | 2250.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 242,490.00 | 2250.00 |

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் .**
**2021.05.04**

## கேள்வி அறிவித்தல்

### வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி.

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2021

01. **தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி** தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
02. நிதி அமைச்சின் பொது நிதி திணைக்கள சுற்றுநிருபம் 04/2016(III) படி தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அத்துடன் அட்டவணையில் குறிப்பிட்டதற்கு இணங்க பொருத்தமான தரத்தில் சிடா (ICTAD/CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி (தொலைபேசி: 024-2053014, மின்னஞ்சல் -vnpsnk@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2021.05.04 ஆம் திகதியிலிருந்து மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் **காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை** கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து தலைவர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி எனும் அலுவலகத்திலிருந்து 2021.05.04 ஆம் திகதியிலிருந்து 2021.05.18 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/ (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகைபணமாகச் செலுத்தப்படவேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி** எனும் முகவரிக்கு 2021.05.18ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்வி தாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்யவோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63நாட்கள் (அறுபத்து மூன்றுநாட்கள்) 2021.07.20 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/VU/VNPS/ W/ 02/2021 | Construction of Water supply scheme at Periyakulam | 3.28 | 3மாதம் | C7 & C8 | 33,000.00 | 2021.08.17 |
| PSDG/VU/VNPS/ W/04/2021 | Construction of weekly market at Sampathnuwara | 1.84 | 3மாதம் | C9& C8 | 18,500.00 | 2021.08.17 |

10. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2021.05.11 ம் திகதி 10.30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ளகேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி,**
**2021.05.04**

# முல்லையில் மண் அகழ்வு; கட்டுப்படுத்தக் கோரிக்கை

*3 கிராம அலுவர் பிரிவைச் சேர்ந்த மக்கள் விடுத்தனர்*

**முல்லைத்தீவு, மே 4**
**முல்லைத்தீவின் புத்துவெட்டுவான், ஐயன்கன் குளம் மற்றும் பழையமுறிகண்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தொடர்கின்ற மணல் அகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள ஆற்றுப்படுகைகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது. துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இவ்விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
எனினும் மணல் அகழ்வு நடைபெறுகின்ற பகுதிகளுக்கு கூட்டத்தை நடத்துகின்ற இணைத்தலைவர்களும் பிரதேச செயலாளரும் வருகை தருகின்றனர் எனக் பல தடவைகள் கூறப்பட்டாலும் அவர்கள் ஒருநாளும் மணல் அகழ்வு நடைபெறுகின்ற பகுதிகளுக்கு வருகை தந்ததில்லை. புத்துவெட்டுவானில் இருந்து கொக்காவில் வரையான சீரமைக்கப்பட்ட வீதி மணல் டிப்பர்களால் குண்டும் குழியுமாக மாறியுள்ளது. மேற்படி மூன்று கிராம அலுவலர் பிரிவுகளின் உள்வீதிகள் டிப்பர்களால் சேதமடைந்துள்ளன. பத்தாண்டுகளில் மணல் அகழ்வைத் தடுப்பதற்கு பொலிஸாரும் அதிகாரிகளும் தவறி விட்டனர். எனவே குறித்த மணல் அகழ்வு நடவடிக்கையை தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையம் அண்மையில் தரமுயர்த்தப்பட்டுள்ளது. எனவே அந்தப் பொலிஸார் இந்தப் பகுதிகளில் நடைபெறுகின்ற மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)



வல்வெட்டித்துறை பகுதியில் கொரோனாத் தொற்றை கையாளுவது தொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் சுகாதாரப் பரிசோதகர்கள் கிராம அலுவலர்கள் மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கையை நேற்று முன்னெடுத்தனர். இதன்போது முகக்கவசம் அணியாதவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன், அவர்களுக்கு முகக் கவசங்களும் வழங்கப்பட்டன. (ப-26)



அளவெட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் இரண்டுக்கு பூமணி அம்மா அறக்கட்டளை ஊடாக யாழ். மாவட்ட மாநகரசபை உறுப்பினர் நா.தனேந்திரன் ஆடுகளை வழங்கினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியைத் துறந்தார் எடப்பாடி பழனிச்சாமி

## 7ஆம் திகதி முதல்வராகிறார் ஸ்டாலின்

சென்னை, மே 4

தமிழக சட்ட பேரவைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து முதல்வர் பழனிச்சாமி பதவி விலகினார். அவரின் பதவிக்காலம் முடிவடைய இன்னும் ஓரிரு நாள்களே உள்ள நிலையில் 'கௌரவ நடவடிக்கையாக' அவர் பதவியில் இருந்து விலகியுள்ளார். இதையடுத்து எதிர்வரும் 7ஆம் திகதி ஸ்டாலின் முதல்வராகப் பதவியேற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.



நடந்து முடிந்த சட்ட பேரவைத் தேர்தலில் தி.மு.க, அ.தி.மு.க கூட்டணி நேரடியாக மோதின. இரண்டு அணிகள் தவிர அ.ம.மு.க மற்றும் ம.நீ.ம ஆகியவை கூட்டணி அமைத்து போட்டியிட்டன. நாம் தமிழர் தனியாக நின்றது. கடும் பிரச்சாரத்துக்கிடையே கடந்த மாதம் 6ஆம் திகதி சட்டப் பேரவை தேர்தல் நடந்து முடிந்தது. இதில் தி.மு.க அமோக வெற்றி பெற்றது. இதையடுத்து தோல்வியை ஏற்று பதவிக்காலம் முடிவடைய முன்னதாகப் பதவியில் இருந்து விலகினார் எடப்பாடி பழனிச்சாமி. (ம)

# பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக என்றென்றும் செயற்படுவோம்

## ஓ.பி.எஸ். - இ.பி.எஸ் கூட்டு அறிக்கை



சென்னை, மே 4

எதிர்க்கட்சி என்னும் பெரும் பொறுப்புடன் அ.தி.மு.கவின் கொள்கை வழி நின்று பணியாற்றுவோம் என, ஓ.பி.எஸ் இ.பி.எஸ் தெரிவித்துள்ளனர். சட்டப் பேரவைத் தேர்தலில் ஆளும் கட்சி என்ற அந்தஸ்துடன் போட்டியிட்ட அ.தி.மு.க. தி.மு.கவிடம் ஆட்சியை இழந்தது. இந்த நிலையில், தேர்தல் தொடர்பில் ஓ.பி.எஸ் இ.பி.எஸ் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையிலேயே அவர்கள் இருவரும் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'தமிழக சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் அ.தி.மு.கவின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும், தங்களது வாக்குகளை அளித்துள்ள வாக்காளர்கள் அனைவருக்கும் எங்களது இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்ந்து 10 ஆண்டு காலம் நடைபெற்ற அ.தி.மு.க அரசு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக ஆற்றி இருக்கும் அரும் பணிகளை மக்கள் அனைவரும் நன்கு அறிவர். நிர்வாகம் என்ற நாணயத்தின் ஒருபக்கம் ஆளும் கட்சி, மற்றொரு பக்கம் எதிர்க்கட்சி. ஆட்சித்தேர் சரியாக செலுத்தப்படுவதை உறுதி செய்யும் அச்சாணியாகவும் செயல்பட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. தமிழக சட்டப்பேரவையிலும், ஆட்சி நிர்வாகத்திலும் எதிர்க்கட்சி என்னும் பெரும் பொறுப்புடன் என்னென்ன பணிகளை ஆற்ற வேண்டுமோ அவை அனைத்தையும் மனத் தூய்மையுடனும், அதிமுகவின் கொள்கை வழி நின்றும் செவ்வனே நிறைவேற்றுவோம். எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்டு, ஜெயலலிதாவால் வழிநடத்தப்பட்டு, ஆல்போல் வேரூன்றி இருக்கும் அதிமுக தொடர்ந்து மக்கள் பணிகளை ஆற்றுவதற்கும், அதிமுகவைக் கட்டிக் காக்கும் கடமையில் தோளோடு, தோள் நின்று உழைப்பதற்கும், அதிமுக உடன்பிறப்புகள் அனைவரும் உறுதி ஏற்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்' - என்றுள்ளது. (ம)

# திரையுலக பிரபலங்கள் ஸ்டாலினுக்கு வாழ்த்து

சென்னை, மே 4

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்கவுள்ள மு.க.ஸ்டாலினுக்கு திரையுலக பிரபலங்கள் பலரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. வெற்றிபெற்று ஆட்சியமைப்பது உறுதியாகியுள்ளது. ஸ்டாலின் எதிர்வரும் 7ஆம் திகதி முதலமைச்சராகப் பொறுப்பேற்கவுள்ளார். ஸ்டாலினுக்குப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள் எனப் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். இதில் திரையுலக பிரபலங்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துகளின் தொகுப்பு:

**பா.இரஞ்சித்:** தமிழக மக்கள் ஆட்சி மாற்றத்திற்கான, தங்களது தெளிவான நம்பிக்கையாக மு.க.ஸ்டாலினை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்! சாதி மத வேறுபாடுகளைக் கடந்து சமூக நீதியை நிலை நாட்ட தங்களது தலைமையிலான ஆட்சியில் சமரசமற்ற முன்னெடுப்புகள் அமைய வாழ்த்துகள்!

**சதீஷ்:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றிருக்கும் மு.க.ஸ்டாலினுக்கும், உதயநிதி ஸ்டாலினுக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

**சூரி:** 40 வருட கடின உழைப்புக்கும், பொறுமைக்கும் பலனாக தி.மு.க சார்பில் தமிழக முதல்வராகப் பதவி ஏற்கும் கழக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்

**ஜி.வி.பிரகாஷ்:** திமுக தலைவராகத் தேர்தலைச் சந்தித்து தமிழக முதல்வராகப் பொறுப்பேற்கும் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள். **வரலட்சுமி:** மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு வாழ்த்துக்கள். உங்கள் ஆட்சியை எதிர்நோக்கியுள்ளேன். எங்களை உயர்த்துங்கள். உங்களது இந்தப் பயணம் தமிழகத்துக்குச் சிறப்பானதாக இருக்கட்டும்.

**ஜெயம் ரவி:** நமது புதிய முதல்வர் மு.க.ஸ்டாலினின் வெற்றிக்கு வாழ்த்துக்கள். சகோதரர் உதயநிதிக்கும் வாழ்த்துகள். இந்த கடினமான காலகட்டத்தில் உங்கள் ஆட்சியை அதிக எதிர்பார்ப்புகளோடு எதிர்நோக்கியிருக்கிறோம்.

**ஹாரிஸ் ஜெயராஜ்:** ஸ்டாலினுக்கும், உதயநிதிக்கும் வாழ்த்துக்கள். **விஷ்ணு விஷால்:** முக ஸ்டாலினை சுற்றி அனைவரும் எவ்வளவு வருடங்கள், எவ்வளவுக் கடினமாக உழைத்தார்கள் என்பதை நான் தனிப்பட்ட முறையில் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு உரிய வெற்றிதான். மு.க.ஸ்டாலின் தலைமையின் கீழ் தமிழகம் மக்களுக்கான, முற்போக்குக் கொள்கைகளைப் பார்க்கக் காத்திருக்கிறோம்.

**பிரகாஷ்ராஜ்:** உயரிய வெற்றி. வாழ்த்துக்கள் மு.க.ஸ்டாலின். மாற்றத்துக்கான தீர்ப்பைத் தமிழக மக்கள் வழங்கியிருக்கிறனர். மாற்றத்தைப் பார்ப்பேன் என்று நம்புகிறேன். வி[illegible]கிறேன். வாழ்த்துக்கள். (ம)



# 15 ஆண்டுகளின் பின்னர் தமிழகத்தில் பா.ஜ.க.

சென்னை, மே 4

தமிழக சட்டப்பேரவையில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜ.க பிரதிநிதிகள் இடம்பெறுகின்றனர்.

நாடு முழுவதும் பலமிக்க கட்சியாக இருந்தாலும் தமிழகம், ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் பா.ஜ.க.வால் ஒருசில தொகுதிகளில்கூட வெல்ல முடியவில்லை. 1996ஆம் ஆண்டில் பேரவைத் தேர்தலில் கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபுரம் தொகுதியில் கிடைத்த வெற்றியே பா.ஜ.கவின் முதல் வெற்றி.

2001ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் 21 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக, மயிலாப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, தளி ஆகிய 4 தொகுதிகளில் வென்றது. அதன்பிறகு நடைபெற்ற 2006, 2011, 2016 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற 3 தேர்தல்களில் பா.ஜ.கவுக்கு ஓரிடம்கூட கிடைக்கவில்லை.

இந்த நிலையில், நடந்து முடிந்துள்ள சட்டப்பேரவை தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் 20 இடங்களில் போட்டியிட்ட பாஜக கோவை தெற்கு, நாகர்கோவில், திருநெல்வேலி, மொடக்குறிச்சி ஆகிய 4 தொகுதிகளில் வென்றுள்ளது. (ம)

# நாம் தமிழர் கட்சி மூன்றாவது நிலை

சென்னை, மே 4

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. மாற்றுச் சிந்தனைகள் கொண்ட கட்சியாக நாம் தமிழர் கட்சி படிப்படியாக உருவாகி வருகின்றது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. நடைபெற்று முடிந்த தேர்தலில் 150க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ஆட்சியமைகின்றது தி.மு.க. எதிர்க்கட்சியாக அ.தி.மு.க செயற்படவுள்ளது. இந்த இரு கட்சியை விட மூன்றாவது இடத்தை நாம் தமிழர் கட்சி வாக்குகளின் அடிப்படையில் பெற்றுள்ளது. தமிழகத்தில் திராவிடக் கட்சிகளுக்கு அடுத்தபடியாக மாற்றுக் கட்சியாக நாம் தமிழர் கட்சி படிப்படியாக உருவெடுத்து வருகின்றது என்று இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழர்களின் துயர்துடைக்க தி.மு.கவின் ஆதரவு தொடரட்டும்

### மு.க ஸ்டாலினுக்கு புளொட் வாழ்த்து

யாழ்ப்பாணம்,மே 4

கடந்த காலங்களில் ஈழத்தமிழர்களின் துயர் துடைப்ப தற்கு, தன்னால் இயன்றளவு பணியாற்றிய திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்தும், முழுமையான அர்ப்பணிப்புடனான பங்களிப்பை எதிர்காலத்திலும் வழங்க வேண்டும்.

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியா தமிழக சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று, ஆறாவது தடவையாகவும், திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

அது தொடர்பில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தங்களது தந்தை ஈழத் தமிழர்களின் பிரச்சினை களை மிகுந்த அக்கறையுடனும், அனுதாபத்துடனும் அணுகியிருந்ததை உணரத் தவறவில்லை.

அந்த உணர்வுடனும், ஆதரவுடனுமே உங்கள் நிலைப்பாடு இன்று வரை தொடர்கின்றது என்பதை நம்புகின்றோம்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுடைய பிரச்சி னைகள் தொடர்பாக, மாபெரும் திராவிட இயக்கத்தின் தலைவராகவும், தமிழகத்தின் முதற்குடிமகனாகவும் இந்திய நடுவண் அரசுக்கு நீங்கள் நியாயபூர்வமான அழுத்தங்களை வழங்க வேண்டும்.

இது இலங்கையில் தமிழ் மக்களுக்கு மிக அவசிய மான தேவையாக இருப்பது மாத்திரமல்ல, தமிழ் மக்களுடைய அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உறுதுணையாக அமையும். என்றுள்ளது. (ப-4)

# கடந்த காலங்களை மறந்து புதிய பாதையில் பணிப்போம்

### தி.மு.க.வுக்கு மனோ வாழ்த்து

கொழும்பு,மே 4

**இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழர் பிரச்சினைகள், தமிழக மக்கள் முன்னால் உள்ள பல்வேறு பிரச்சினைகளில் ஒன்றாகும். அங்கு வாழும் சுமார் எட்டு கோடி தமிழர்கள் எமது உடன்பிறப்புகள். அந்த எட்டுக்கோடி என்பது எமது பாதுகாப்புக் கவசம். கடந்த காலங்களில் அந்தப் பாதுகாப்பு கவசம் சரியாகப் பயன்படாமல் போய்விட்டது. இதற்கான காரணங்கள் பல. அவற்றை ஆராய்வது இப்போது உசிதமானதல்ல.**



ஆகவே, கடந்த காலங்களைமறந்து விட்டு, தமிழகத்தின் ஆளும் கட்சி யையும், தமிழக முதல்வரையும் வாழ்த்தி வரவேற்போம்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட் டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் புதிய முதல்வ ராக பதவியேற்கவுள்ள மு.க. ஸ்டாலினுக்கு அவர் வெளி யிட்டுள்ள வாழ்த்துச் செய் தியில் தெரிவித்துள்ளதா வது, தமிழகத் தேர்தல் முடிவுக ளில் நேரடியாகத் தலையிட, நாம் அங்கே வாக்காளர்கள் அல்ல.

ஆனால் அதுபற்றி நாம் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில் இலங்கை எமது தாய்நாடு. இந் தியத் தமிழகம் எங்கள் தந்தையர் நாடு. தமிழக உடன்பிறப்புகள் தரும் ஜனநாயக முடிவுகளை ஏற்று, அதை எப்படி எமக்குப் பயனுள்ளதாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதை மட்டுமே, இலங் கையில் நாம் கணிக்க வேண்டும். -என்றுள்ளது. (ப-4)

## மீனவர் பிரச்சினையை ஸ்டாலின் தீர்ப்பாராம்

### தப்பித்தார் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,மே 4

இலங்கையின் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க ஸ்டாலின் தீர்வு பெற்றுத்தருவார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றமைக்காக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய இழுவைப் படகுகளால் வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தருவேன் என்று அடிக்கடி கூறி வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மீனவர்களுடன் படகுகளில் தமிழகம் சென்று பிரச் சினையைத் தீர்ப்பேன் என்றும் மார்தட்டியிருந்தார்.

எனினும் இந்திய மீனவர்களுடைய அத்து மீறலைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க ஸ்டாலின் தீர்ப்பார் என்று தெரிவித்துள்ளார். (ப-4,-6)

## வட மாகாண ஆட்சியைப் பிடிக்க ஆனந்தசங்கரியும் தீவிர முயற்சி?

வவுனியா,மே 4

வடக்கு மாகாணத்தில் ஆட்சியமைப்பதற்கு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரியும் முயற்சிகளை முன் னெடுத்துள்ளார். தமிழகத்தில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டு ஆட்சியமைத்துள்ள தி.மு.க, தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு அவர் அனுப்பிய வாழ்த்துச்செய்தியில் இலங்கையி லும், விரைவில் உதய சூரியன் உதிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதா வது;

தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டுகளின் பின் மீண்டும் உதயசூரியன் உதித்தமை தமிழ் பேசும் நல்லுலகில் மக்கள் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது. நீங்கள் அடைந்த வெற்றி தமிழர்களுக்கு பெரும் திருப்தியைத் தந்துள்ளதுடன், தங்கள் தந்தை இன்று இல்லா தது வருத்தத்துக் குரியதாகும். இன்று நீங்கள் ஈட்டியுள்ள வெற்றி எனக்கு பல மடங்கு மகிழ்ச்சி யைத் தருகிறது. இனப் பிரச்சினை தீர்வுக்கு தங் கள் தந்தையார் கலைஞரின் உதவியைப் பெறும் படி அன்றைய அரசை வேண்டியிருந்தேன். எமது நாட்டுப் பிரச்சினை தீர உங்களின் பங்க ளிப்பு மிக முக்கியமானது மட்டுமல்ல அவசியமா னது என்றும் ஞாபகமூட்டி, உங்கள் தந்தையார் ஆற்றிய பணியை எமது விடயத்திலும் நீங்கள் தொடர வேண்டும் என வேண்டி இலங்கை வாழ் தமிழ் மக்களின் சார்பில் எமது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவிக்கின்றேன். எம் நாட்டிலும் விரைவில் சூரியன் உதிக்கும் என்பதையும் தெரி வித்துக்கொள்ள விரும்புகின்றேன் என்றுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பேச் சுக்கள் சூடு பிடித்துள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக தமிழ் அரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனாதிராசாவைக் கள மிறக்குவது தொடர்பிலும் பேச்சுக்கள் இடம்பெற் றுவருகின்றன. இந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் நினைவு தினத்தின்போது, உரையாற்றிய ஆனந்தசங்கரி மாவை சேனாதிராஜா தொடர்பில் அவரது வன் மத்தைக் கொட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. (ப-110)




# பௌத்த மயமாக்கலுக்கு அதிகாரிகளும் துணையா?

### ரவிகரன் ஆதங்கம்

முல்லைத்தீவு,மே 4

பேரினவாத ஆட்சியாளர்களின் பௌத்த மயமாக்கல் செயற்பாடு களுக்கு, வடமாகாண சுகாதார அமைச்சும், அதன் அதிகாரிகளும் துணைபோகின்றார்களா? என்று வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பி யுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்க ளின் பூர்வீகப் பகுதியான மணலாறு (வெலி ஓயா) பகுதியில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத் தால், சித்த மத்திய மருந்தகம் ஒன்று அண்மையில் திறக்கப்பட்டது. அந்த மருந்தகத்தின் பெயர்ப் பலகையில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி இரண்டாம் நிலையில் தள்ளப் தப்பட்டுள்ளது. அத்துடன் திறப்பு விழாவுக்கு மதகுருக்களின் சார்பில் பௌத்த மதகுரு ஒருவரே அழைக் கப்பட்டுள்ளார். இது தொடர்பில் ரவி கரன் தெரிவித்தகையில்; மிழர்களின் தாயகப் பரப்புக்களில் ஒன்றான, வடமாகாணத்தில் தமிழ் மொழி ஓரங்கட்டப்படுவதையும், சிங்களம் முன்னுரிமைப்படுத்தப்படுவதையும் ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக தமிழர்களின் பூர்வீகமான மணலாற்றுப் பகுதியைத் திட்டமிட்டு சிங்களப் பேரினவாத அரசு ஆக்கிரமித்துள்ளது. மகாவலி (எல்) முதலான அரச திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர்களின் பூர்வீக மணலாற்றுப் பகுதியில் தற் போது அதிகளவில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். தமிழர்க ளின் மணலாறு தற்போது சிங்களப் பேரினவாத அரசால் வெலி ஓயாவாக மாற்றப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு உரித்தான, தமிழர் கள் அதிகம் அதிகம் வாழும் வடக்கு மாகாணத்தில் தமிழ்மொழியே முன் னிலைப்படுத்தப்படவேண்டும். அதிக மாக சிங்கள மக்கள் வசிக்கக்கூடிய தென்னிலங்கையின் பல பகுதிகளில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின் றனர். அவ்வாறு தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றனர் என்பதற்காக அங்கு தமிழ் மொழி முன்னிலைப் படுத்தப்படுவதில்லை. அவ்வாறிருக்க தமிழர்களே அதிகமாக வசிக்கின்ற வடமாகாணத்தில் எவ்வாறு சிங்கள மொழியை முன்னுரிமைப்படுத்த முடி யும்? என்றார். (ப4,319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிரங்க ஏலவிற்பனை
### வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி

வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட நைனாமடு கரப்புக்குத்தி வீதியில் உள்ள சபைக்கு சொந்தமான கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்ட விபரப்படியான வீதி வேலைக்குப் பயன்படுத்தக்கூடிய 4" மற்றும் 2" கற்கள் 2021.05.11 ம் திகதி (செவ்வாய் கிழமை) மு.ப 10.00 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| *S.No* | *Type of Metal* | *Total Quantity* | *Initial Rate for 1 $m^3$* |
|---|---|---|---|
| *01* | *4"* | *713.261$m^3$* | *1525/=* |
| *02* | *2"* | *608.937$m^3$* | *2400/=* |

ஏலத்தில் கொள்வனவு செய்யப்படும் கற்களிற்கான கொடுப்பனவினை பணமாக செலுத்துவதுடன் ஏலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களை அன்றைய தினமே தளத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

மேலும் பகிரங்க ஏல விற்பனையினை இரத்து செய்யும் அதிகாரம் தவிசாளர் / செயலாளரிற்கு உள்ளது.

மேலதிக தகவல்களுக்கு பிரதேச சபையின் அலுவலக தொலைபேசி இலக்கம் 024 – 2053134 உடன் தொடர்புகொள்ளவும்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி**
**2021.05.03**

## 31 ஆம் நாள் நினைவுகளும் நன்றி நவிலலும்

மலர்வு 31 . 12 . 1982



உதிர்வு 05 . 04 . 2021

கடந்த 05.04.2021 திங்கட்கிழமை
இறைபதம் அடைந்த எமது புதல்வன்

### அமரர் ரகுபதி - ஹரேஸ்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவுகளை நினைவு கொள்வதுடன் அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும், மரணச்சடங்கின் போது பல்வேறுவகைகளிலும் உதவியவர்களுக்கும், கொழும்பில் உடனடியாக வந்து உதவியவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி அறிதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:**
கோவிட் - 19 நாட்டின் சுகாதார நிலைமைகளைக் கருத்தில்கொண்டு அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிருத்தியம் என்பவற்றை குடும்பத்தாருடன் மட்டும் செய்வதற்கு சுகாதார அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

**077 110 2816** **இ.ரகுபதி - தந்தை**

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்.

**தோற்றம்:**
**28.09.1946**



**மறைவு**
**04.04.2021**

கடந்த 04.04.2021 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் மெல்லின் ஞானப்பிரகாசம்
**(நில அளவையாளர்)**

அவர்களின் ஆத்ம இளைப்பாற்றிற்காக செபிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்

**அன்பின் இறைவா, இவ்வுலகில் இருந்து உம்மிடம் அழைத்துக்கொண்ட உம் அடியாளின் குற்றங் குறைகளை மன்னித்து உமது வான் வீட்டில் சேர்த்தருள வேண்டுகின்றோம்– ஆமென்**

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் பதாகைகள், கண்ணீர் அஞ்சலிகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தற்சமயம் நாட்டில் நிலவும் இக்கட்டான சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் நினைவஞ்சலி நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

**இல.24/2, அச்சுக்கூட வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**021 222 9542**

# ஸ்டாலினுக்காக நாக்கு அறுத்து நேர்த்திக்கடன் செலுத்திய பெண்

சென்னை, மே 4

மு.க.ஸ்டாலின் முதலமைச்சர் ஆக வேண்டும் என்பதற்காக பெண் ஒருவர் நாக்கை அறுத்து நேர்த்திக்கடன் செலுத்திய சம்பவம் தமிழகத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக சட்ட சபை தேர்தலில் பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களைவிட கூடுதல் இடங்களை கைப்பற்றிய தி.மு.க., வரும் 7ஆம் திகதி ஆட்சி அமைக்க உள்ளது. அந்தக் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராகப் பதவியேற்க உள்ளார். இந்த நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ள பொதுவகுடியைச் சேர்ந்த வனிதா (வயது 32), சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று மு.க.ஸ்டாலின் முதலமைச்சரானால் தனது நாக்கை அறுத்து தருவேன் என வேண்டிக் கொண்டார் என்றும் அதன்படி பரமக்குடி முத்தாலம்மன் கோவில் வாசலில் முன்பு தனது நாக்கை வனிதா கத்தியால் அறுத்து கோவில் வாசல்படியில் வைத்துவிட்டு குருதி வெள்ளத்தில் கிடந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அந்த பெண்ணை பொதுமக்கள் மீட்டு பரமக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# அபுதாபி அதிர்ஷ்டலாபச் சீட்டால் மில்லியனராக மாறிய இலங்கையர்

கொழும்பு, மே 4

அபுதாபி நாட்டின் மிகப் பெரிய அதிர்ஷ்டலாபச் சீட்டுழுப்பில் இலங்கையர் ஒருவர் தெரிவாகியுள்ளார் என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவித்தன. 12 மில்லியன் திர்ஹாமை (3.3 மில்லியன் அமெரிக்க டொலர்) அவர் வென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையைச் சேர்ந்த முகமது மிஷ்பாக் என்பவரே இந்தத் தொகையை வென்றிருக்கிறார். இவர் தொழில் நிமித்தம் டுபாயில் தங்கியிருந்துள்ளார். தற்போது இலங்கைக்கு விடுமுறையில் வந்துள்ளார்.

அபுதாபியின் மிகப் பெரிய அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு நிகழ்ச்சியான பிக் டிக்கெட் ரோஃபிள் டிரா தொடரின் அதிர்ஷ்டலாபச் சீட்டை கடந்த மாதம் வாங்கியுள்ளார். அவரது சீட்டின் இலக்கம் வெற்றியிலக்கமாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. மிஷ்பாக்கைத் தவிர மேலும் இருவர் மில்லியனர் பரிசுகளை வென்றுள்ளனர். இவர்கள் தொழில் நிமித்தம் அபுதாபி சென்ற இந்தியர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

### வேலையாட்கள் தேவை

**Lovely Flower Cent** கிளிநொச்சி கிளைக்கு பெண் வேலையாட்கள் தேவை.
**வயதெல்லை 18-30**
**தொடர்பு: 077 400 5023**

### தேவை

**திருநெல்வேலி சிமார்ட் கிட்ஸ்**
கணினி அறிவுடைய அலுவலக உதவியாளர் தேவை.
MS Office: Word,Excel, Power point திறன்கள் பரீசீலிக்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும்
**இறுதித் திகதி 07.05.2021**
**தொடர்பு: 077 386 7458**
**021 221 6933**
**ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி.**

## மரண அறிவித்தல்

தோற்றம் . 24 . 11 . 1950



மறைவு . 03 . 05 . 2021

### திருமதி சண்முகலிங்கம் இன்பராணி

நுணாவில் சந்தியை பிறப்பிடமாகவும், இந்தியாவை (சென்னை) தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் இன்பராணி நேற்று (03.05.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயிலுப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும், சசிகர் (இந்தியா), ப்விகரன் (இலங்கை), அமுதா (பிரான்ஸ்), துளசி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவிச்சந்திரன், கண்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அக்ஷயன், ஆராதனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மங்கையற்கரசி, காலஞ்சென்ற யோகவதி, புஸ்பமலர், மனோன்மணி, தெய்வேந்திரா (தம்பி மாமா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2021) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் இந்தியாவில் (சென்னை) இடம்பெற்று, பூதவுடல் சென்னையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**[illegible] நுணாவில்**
**ஒழுங்கை வீதி,**
**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**மகன் சசி (இந்தியா)**
**0091 9789915352**
**மகன் கரன் 077 695 3155**
**மகள் அமுதா, துளசி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்மக்கழிவு நிலையத்தில் இந்திய இயந்திர சாதனங்கள்

## வலி.தென்மேற்கு சபை நடவடிக்கை

வலி.தென்மேற்கு, மே 4

வலி. தென்மேற்கு பிரதேச சபையால் கல்லுண்டாய் பகுதியில் சுமார் 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்கள் பொருத்தும் வேலைகள் தற்போது துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள காக்கைதீவு திண்மக்கழிவு வளாகத்தை முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொண்ட யாழ். மாநகர சபை, அங்கு ஒரு உழவு இயந்திரப் பெட்டியில் நிரப்பப்பட்ட அளவு திண்மக்கழிவைக் கொட்டுவதற்கு ஐநூறு ரூபா வீதம் பணம் செலுத்த வேண்டும் என்று வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு நிபந்தனை விதித்திருந்தது. இந்த நிலையில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தவேண்டிய பணம் விரயமாவது குறித்து கவனம் செலுத்திய பிரதேச சபைக்கு, திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைக்க வேண்டிய அவசியமும் தேவையும் ஏற்பட்டது.

இதையடுத்து கல்லுண்டாய் பகுதியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட காணியில் சுமார் 50 லட்சம் ரூபா செலவில் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கட்டட வேலைகள் பூர்த்தியாகியதைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்கள் பொருத்தும் வேலைகள் தற்போது துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையம் இயங்க ஆரம்பித்ததும் அங்கு கழிவுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பசளைகள் விவசாயிகளுக்கு நியாய விலையில் வழங்கப்படும் என்றும் இதன் மூலம் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் தவிசாளர் தெரிவித்துள்ளார். (ப-115)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய் காலை 8மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.மாவட்டத்தில்** பலாலி வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், அக்கரை, வளலாய், வாதரவத்தை, பெரியபொக்கணை, ஐஸ் தொழிற்சாலை பொலிகண்டி, அண்ணா சிலையாடி, பாரதி வீதி கம்பர்மலை, இலந்தைக்காடு, கல்லுவம், கணபதி ஆலை கொற்றாவத்தை, கெருடாவில், கொற்றாவத்தை, மண்டான், மயிலியதனை, நாச்சிமார் கோவிலடி பொலிகண்டி, நவிண்டில் உடுப்பிட்டி வதிரி வீதி, நெடியகாடு, பழைய காவல் நிலையம் வல்வெட்டித்துறை, பொக்கணை, பொலிகண்டி, புறாப்பொறுக்கி, சந்நிதி கோவில், சிதம்பரா கல்லூரி, தொண்டமனாறு, உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை சந்தி, ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** ஆச்சிபுரம், ஆசிக்குளம், அவறந்துலாவ, எல்லப்பர்மருதங்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, மகாமயிலங்குளம், மதுரநகர் கல்நாட்டினகுளம், பழையனூர், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# பேனைத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே 4

வெளிநாடொன்றில் தயாரிக்கப்பட்ட பேனைத் துப்பாக்கியுடன், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


கொக்கல விமானப் படை புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலை அடுத்து அஹங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் சந்தேகநபரிடமிருந்து வலம்புரி சங்குகள் நான்கும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)





தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் அ.சச்சிதானந்தம் தலைமையில் தமிழ் அரசுக் கட்சி அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது. (ப-6,113)

# தொடக்க டிஜிட்டல் விற்பனை மாநாட்டில் மிகச்சிறந்த செயற்றிறனாளர்களைப் பாராட்டும் AIA இன்ஷூரன்ஸ்



**2019** ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தினுடைய மிகச்சிறந்த செயற்திறனாளர்களைப் பாராட்டுவதற்கும் மற்றும் கௌரவிப்பதற்குமாக தனது முதலாவது வருடாந்த டிஜிட்டல் விற்பனை மாநாட்டை AIA இன்ஷூரன்ஸ் நடாத்தியிருந்தது. உங்களுக்குள் இருக்கும் சூப்பர் ஹீரோவினைத் தட்டி எழுப்புங்கள் எனும் கருப்பொருளில் தங்களது விமர்சையான வெற்றிக் கொண்டாட்டத்தில் நாடு முழுவதிலும் இருந்து 2663 வெல்த் பிளேனர்கள் டிஜிட்டல் வழியாகத் திரண்டிருந்ததைப் பார்க்கக்கூடியதாகவே இருந்தது. AIAவாடிக்கையாளர்களுக்கு எதிர்பார்ப்பிற்கு அப்பால் சேவையாற்றும் அதி உயர் அர்ப்பணிப்பு மற்றும் தியாகப் பண்புகளைக் கொண்ட தங்களது துறையில் மிகச்சிறந்தவர்களாக மிளிர்ந்து, வளர்ந்து வரும் வெற்றியாளர்களே இதன்போது கௌரவிக்கப்பட்டிருந்தனர். 2019 ஆம் ஆண்டின் மிகச்சிறந்த செயற்திறனாளர்களைக் கௌரவிக்கும் விதமாக நான்கு விருதுகள் வழங்கப்பட்டிருந்ததே இம்மாலைப் பொழுதின் விசேட அம்சமொன்றாக அமைந்திருந்தது. இந்த வருடத்திற்கான மிகச்சிறந்த வெல்த் பிளேனர் விருது மொரட்டுவைப் பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த K D மத்ராகினி தக்ஷிலாவிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், U.A.M சஞ்சீவனி சோமரத்ன (கண்டிப் பிரதான விநியோகப் பிரிவு) மற்றும் S. P. S. றொட்ரிகோ (கொழும்பு மெட்ரோ விநியோகப் பிரிவு) ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை வெற்றி பெற்றிருந்தனர். கேகாலைப் பிராந்தியம் 2 ஐச் சேர்ந்த N W நிலந்த சேனரத்ன பண்டாரவினால் அதிசிறந்த வெல்த் பிளேனர்களின் முகாமையாளர் விருது வெற்றி பெறப்பட்டிருந்தது. முறையே இரண்டாம், மற்றும் மூன்றாம் இடங்களை மொரட்டுவைப் பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த திருமதி. S. S. பிரியந்த டயஷும், கொழும்புப் பிராந்தியம் 5 ஐச் சேர்ந்த M. D. துராஜ் அபென் சோவும் வெற்றி பெற்றிருந்தனர்.

இதன்போது மொரட்டுவைப் பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தைச் (ADO) சேர்ந்த B.P.V. ராஜித பிரியசெனரத் மிகச்சிறந்த தரம் 3 தலைவர் விருதைத் தனதாக்கிக் கொண்டபோது, முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைG. H. C திலீப அமீன்ரா (திஸ்ஸமஹாராமைப் பிரதேச அபிவிருத்தி அலுவலகம்) மற்றும் Y G G B யட்டிகம்மன (மாவனல்லை ADO) ஆகியோர் வெற்றி பெற்றிருந்தனர். கேகாலைப் பிராந்தியம் 2 ஐச் சேர்ந்த சானா துனுசிங்க மிகச்சிறந்த விநியோகப் பிரிவுத் தலைவர் விருதை வெற்றி பெற்றிருந்த போது, முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை மொரட்டுவை பிராந்தியம் 1 ஐச் சேர்ந்த ஹேமன் குமாரவும், கொழும்புப் பிராந்தியம் 2 ஐச் சேர்ந்த திருமதி. இந்துனில் அமரசிங்கவும் வெற்றி பெற்றிருந்தனர். அதேவேளை வளர்ந்து வரும் மிகச்சிறந்த வெல்த் பிளேனர்களுக்கான விருதை மஹரகம விநியோகப் பிரிவைச் சேர்ந்த திருமதி. V. A. R. Sசந்திரிகா பெரேரா பெண்கள் பிரிவிலும், பொலநறுவைப் பிரதான விநியோகப் பிரிவைச் சேர்ந்த K. G. A. பண்டார கஹவத்த ஆண்கள் பிரிவிலும் வெற்றி பெற்றிருந்தனர். கம்பளை விநியோகப் பிரிவைச் சேர்ந்த புஷ்பா வீரசிங்க மிகச்சிறந்த வளர்ந்து வரும் வெல்த் பிளேனர்களின் முகாமையாளருக்கான விருதை பெண்கள் பிரிவிலும், இரத்தினபுரி விநியோகப் பிரிவைச் சேர்ந்த சு தும்சிந்த ஜெயசிங்க ஆண்கள் பிரிவிலும் வெற்றி பெற்றிருந்தனர்.

உங்களுக்குள் இருக்கும் சூப்பர் ஹீரோவினைத் தட்டி எழுப்புங்கள் எனும் கருப்பொருளானது AIA இனுடைய பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த சேவைகளை வழங்கும், மற்றும் தங்களையும், தங்களினது குடும்பத்தையும் பாதுகாக்கும் இலங்கையர்களுக்கு உதவும் மிகச்சிறந்த செயற்திறனாளர்களின் அர்ப்பணிப்பினை அடையாளப்படுத்தி, கௌரவித்து அவர்களுக்குள் இருக்கும் சூப்பர் ஹீரோவிற்கான தூண்டுதலைப் பாராட்டுவதையே நோக்காகக் கொண்டமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காயில் பல கிராமங்களுக்கு 10 ஆண்டுகளாக பஸ் சேவை இல்லை

### பாதிக்கப்பட்ட மக்கள் கவலை

முல்லைத்தீவு, மே 4

**முல்லைத்தீவு - துணுக்காய் பஸ் நிலையத்தில் இருந்து கிராமங்களுக்கான பஸ் சேவைகள் நடத்தப்பட வேண்டும் என பாதிக்கப்பட்ட கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



கோட்டை கட்டியகுளம், ஐயன்கன்குளம், அம்பலப்பெருமாள்குளம், தென்னியங்குளம், அமதிபுரம், பழையமுறிகண்டி, ஆலங்குளம், கல்விளான், தேராங்கண்டல், உயிலங்குளம், மற்றம் புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களின் மக்கள் கடந்த பத்தாண்டுகளாக போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் குறித்த கிராமங்களுக்கு பஸ் சேவைகள் நடத்துவோம் என அதிகாரிகளாலும், அரசியல்வாதிகளாலும் பல தடவைகள் வாக்குறுதிகள் வழங்கப்பட்டும் மேற்படி கிராமங்களுக்கு கடந்த பத்தாண்டுகளாக பஸ் சேவைகள் நடைபெறவில்லை என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பஸ் சேவைகளை நடத்தாமைக்கு ஆரம்பத்தில் கிராமங்களின் வீதிகள் சீரின்மை என்று காரணம் கூறப்பட்டது.


தற்போது துணுக்காயில் இருந்து அக்கராயன் வரையான வீதியும் துணுக்காயில் இருந்து ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், கொக்காவில் வரையான வீதிகளின் சீரமைப்பு வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவு கிராமங்களுக்கு துணுக்காய் பஸ் நிலையத்தில் இருந்து போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியும்.

வடமாகாண சபை இயங்கிய காலத்தில் மாங்குளத்தில் இருந்து துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளின் கிராமங்களுக்கு பஸ் சேவையை நடத்துவது என முடிவுகள் எடுக்கப்ப்ட்டன.

ஆனால் இதுவரை பஸ் சேவைகள் கிராமங்களுக்கு இடம்பெறவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த பிரதேச செயலாளர் பிரிவுகளாக மாந்தை கிழக்கு, துணுக்காய் காணப்படுகின்றது

எனவே பொறுப்புமிக்க அதிகாரிகள் மக்கள் நலன் கருதி உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் மேலும் கோரிக்கை விடுத்தனர். (ப-13)



## பயிர் அழிவைச் சந்தித்த விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதில் இழுத்தடிப்பு

### வலி.தென்மேற்கு பிரதேச அபிவிருத்திச் சங்கம் கவலை

யாழ்ப்பாணம், மே 4

அண்மையில் பெய்த கடும் மழையால் வலி. தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிறு தானியங்கள் மழைவெள்ளத்துக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் அழிவடைந்து வருகின்றன. இவ்வாறு அழிவடைந்து பேரிடரைச் சந்தித்துள்ள வலி.தென்மேற்கு விவசாயிகளுக்கு உடன் இழப்பீடு வழங்க வலி.தென் மேற்கு பிரதேச செயலாளர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் ஒருங்கிணைந்த அடிப்படையில் உதவ வேண்டும் என வலி.தென் மேற்கு பிரதேச அபிவிருத்திச் சங்க தலைவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; எள்ளு, பயறு, உளுந்து போன்றவற்றை இவ் வருடம் விவசாயிகள் பெரும் ஆர்வத்துடன் மண்ணை உளுது பண்படுத்தி பசளையிட்டு சிறு தானியச் செய்கையை மேற்கொண்டனர். இவ்வாறு சிறுதானியச் செய்கையை ஆர்வத்துடன் மேற்கொண்டிருந்த விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக தற்போது பெய்துவரும் கடும் மழை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பயிர் அழிவுகளால் விவசாயிகள் பெரும் இழப்பை எதிர்கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விவரங்களை விவசாய சம்மேளனங்கள், கமநல சேவைகள் நிலையமூடாகப் பெற்று அழிவடைந்த வாழ்வாதாரத்துக்கு உதவவேண்டும்.

இதேவேளை கடந்த வருடம் பெரும்போக நெற்செய்கையின் போது பேரிடர் மழையாலும், வலிகாமம் விவசாயிகள் முழு இழப்பை எதிர்கொண்டிருந்தனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் இதுவரை காப்புறுதி இழப்பீட்டு நிதி வழங்கப்படவில்லை என வலி. தென்மேற்கு பிரதேச அபிவிருத்திச்சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ-50)

## புளுட்டுமானோடையை பௌத்த மயமாக்க முயற்சி

### கூட்டமைப்பினர் களப்பயணம்

மட்டக்களப்பு.மே 4

மட்டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈரளக்குளம் புளுட்டுமானோடையை பௌத்த மயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அறிந்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் அந்தப் பகுதிக்கு களப்பயணம் மேற்கொண்டனர்.

குறித்த பகுதியில் உள்ள பண்டைய வரலாற்றுடன் தொடர்புபட்ட பிரதேசத்தை, அரச அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் அண்மையில் பார்வையிட்டுள்ளனர்.

அதனால் அவ்விடத்தில் பௌத்த மத்தியஸ்தானம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கோ.கருணாகரம், இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், முன்னாள் மாகாண சபைப் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா, உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன் உள்ளிட்ட குழுவினர் நேரடியாக அந்த இடத்துக்குச் சென்றனர்.

குறித்த பிரதேசத்தின் நிலைமைகள் மற்றும் சூழமைவுகள் தொடர்பில் பரிசீலித்தனர். அந்தப் பகுதியில் பல செதுக்கல்கள் மற்றும் படி அமைப்புகள் ஆகியவை இருந்ததை அவதானித்தனர். (ப-4-.150)



## இராணுவத்தால் வழங்கப்பட்ட வீட்டை காரணங்காட்டி நிரந்தர வீடு மறுப்பு

முல்லைத்தீவு, மே 4

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில், ஆரோக்கியபுரம் கிராமத்தில் குடும்பம் ஒன்றுக்கு வீட்டுத் திட்டத்தில் நிரந்தர வீடு மறுக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியபுரம் கிராமத்தில் உள்ள கதிரேசன் தங்கராசா என்ற 6 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கே இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடு உள்ளது என்று தெரிவித்து நிரந்தர வீடு மறுக்கப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நலன்புரி முகாம்களில் இருந்த மக்கள் ஆரோக்கியபுரம் கிராமத்தில் குடியேற்றம் செய்யப்பட்டனர். சிறிய குழந்தைகளுடன் தறப்பாளுக்குள் குடும்பம் இருந்ததன் காரணமாக இராணுவத்தினரால் தற்காலிக சுவர்கள் எழுப்பப்பட்டு, தகரத்திலான வீடு 2011ஆம் ஆண்டளவில் அமைத்து அந்தக் குடும்பத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்திவாரம் உட்பட கட்டுமானங்கள் அனைத்தும் தற்காலிகமாக அமைக்கப்பட்டதன் காரணமாக சுவர்களில் பெரிய வெடிப்புகள் தற்போது ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் குறித்த குடும்பத்தினர் நிரந்தர வீட்டுத் திட்டம் கோரி விண்ணப்பித்திருந்த நிலையில், இராணுவத்தினர் அமைத்த தற்காலிக வீட்டைக் காரணங்காட்டி கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நிரந்தர வீடு மறுக்கப்பட்டு வருகின்றது. எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, தமக்கான நிரந்தர வீட்டைப் பெற்றுக்கொடுக்குமாறு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கோரிக்கை விடுத்தனர். (ப-13)

## புதுக்குளம் பகுதியில் 100 பேருக்கு பி.சி.ஆர்.

### தொற்றுநீக்கலும் முன்னெடுப்பு

வவுனியா,மே.4

வவுனியா குருக்கள் புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 100 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் பல்வேறு பகுதிகளிலும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குருக்கள் புதுக்குளம் பகுதியில் கடந்த இருதினங்களுக்கு முன்பாக இரண்டு பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. அவர்கள் கிராமத்தில் இடம்பெற்ற சில நிகழ்வுகளிலும் கலந்துகொண்டுள்ளனர்.

இதனையடுத்து குறித்த இருவருடனும் தொடர்புகளைப் பேணிய 100 பேருக்கே நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளதுடன்,கிராமத்தில் தொற்றுநீக்கல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஒரு சில மருத்துவமனைகளிலும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான விடுதிகள் விரைவில் திறக்கப்படவுள்ளன. அதற்குரிய ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

**கடந்த முதலாம் திகதி சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சிக்கும், இலங்கையிலுள்ள மருத்துவமனைகளின் பணிப்பாளர்கள், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் இடையில் 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்துரையாடல் நடத்தப்பட்டது.** இதன்போது பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்று தீவிரமாகப் பரவி வருகின்றது. பிரிட்டனில் கண்டறியப்பட்ட திரிபு வைரஸே இவ்வாறு பரவுகின்றது. இளையோரை அதிகளவில் தாக்குகின்றது. இந்த வைரஸ் தொற்றுக்கு இலக்காவோர் மருத்துவக் கண்காணிப்பிலேயே வைத்திருக்கப்படவேண்டும். இதனால் முன்னைய காலங்களில் கொரோனாத் தொற்றாளர்களுக்கு தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைத்து சிகிச்சையளித்ததைப் போன்று சிகிச்சையளிக்க முடியாது.

இதன் காரணமாக ஒவ்வொரு பிரதான மருத்துவமனைகளிலும் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவ விடுதிகளை ஏற்பாடு செய்யுமாறு சுகாதார அமைச்சர் பணித்துள்ளார். ஆண், பெண் என்று இரண்டு விடுதிகளை கொரோனாத் தொற்றாளர்களுக்கு உடனடியாக ஒழுங்கமைக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் கட்டில்கள் ஏற்பாடு செய்யப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கு அமைவாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 2ஆம் மற்றும் 3ஆம் இலக்க விடுதிகள் கொரோனாத் தொற்றாளர்களுக்கான விடுதிகளாக மாற்றப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்திலுள்ள, மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு உட்பட்ட ஏனைய மருத்துவமனைகளிலும் இவ்வாறான விடுதிகள் திறக்கப்படவுள்ளன. இதற்கான மருத்துவமனைகளை அடையாளம் காணும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ.5)

## ரயில்...

சேவைகள் மறு அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் (இல 4003) ஸ்ரீதேவி ரயில் சேவை (கொழும்பு - காங்கேசன்துறை, மதியம் 15.55), நாளை முதல் (இல 4004) ஸ்ரீதேவி ரயில் சேவை (காங்கேசன்துறை - கொழும்பு) ஆகிய ரயில் சேவைகளே மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## யாழ். போதனா...

வமனைகளிலும் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான விடுதிகள் திறக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார அமைச்சர் அறிவுறுத்தியிருந்தார்.

இதற்கு அமைவாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இரண்டு விடுதிகள் கொரோனா சிகிச்சை நிலையத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

**தற்போது தென்னிலங்கையில் உள்ள** மருத்துவமனைகளில் நோயாளர்கள் நிரம்பியுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள கட்டில்கள் தொடர்பான விவரங்கள் இராணுவத்தினரால் சேகரிக்கப்பட்டுள்ளன. (ஒ.5)

## கிளிநொச்சி...

எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

**கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் நான்கு பொலிஸார் கடமை நிமித்தம் வெளிமாவட்டங்களுக்குச் சென்று திரும்பியிருந்தனர்.** அவர்களுக்கு நேற்று அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றும், அவர்கள் கொரோனா சிகிச்சை மையத்துக்கு மாற்றப்படுவர் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ6,316)

## பிரதேச சபை...

அவர்களில் 14 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமத்தில் 4 வர்த்தகர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சாவகச்சேரி உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் இருவர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள். ஒருவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நிறுவனங்களின் பணியாளர்களிடம் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மானிப்பாயில் நிதி நிறுவன ஊழியர் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாங்குளம் ஆதார மருத்துவமனை உத்தியோகத்தர் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஆசிரியர் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் கண்டி சென்று திரும்பியிருந்தார்.

வவுனியா, பூவரசங்குளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்னார் பொது மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26,159)

## ஊடகங்களின்...

மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதிசெய்வதற்காக இரவு பகலாக அயராது உழைக்கும் அனைத்து ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வாழ்த்துக்கள்.

இந்த நாட்டின் ஊடக சுதந்திரம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட விசித்திரமான காலங்களை நாம் நினைவுபடுத்தத் தேவையில்லை. நாம் அதிகாரத்தில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் தகவல் அறியும் உரிமையையும், ஊடக சுதந்திரத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அறிவை ஆயுதமாகக் கொண்ட ஊடகவியலாளர்களின் தொழில் வளர்ச்சிக்காக கல்வி புலமைப்பரிசில்கள் மற்றும் ஊடக உபகரணங்களை வழங்குவதற்கான எமது நடவடிக்கை எதிர்காலத்திலும் செயற்படுத்தப்படும். துல்லியமான செய்திகளை அறிந்துகொள்வதற்கான மக்களின் உரிமையை பாதுகாத்து, நாட்டின் ஒட்டுமொத்த சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிலாஷைகளை அடைவதற்கு ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்துமாறு அனைத்து ஊடகவியலாளர்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளது. (ம4,22)

## நேற்று...

யின் தலைவரும், இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நேற்றுவரை ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 676 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 98 ஆயிரத்து 209 பேர் சிகிச்சை பெற்றுக் குணமாகியுள்ளனர்.

அதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. இந்த உயிரிழப்புக்களுடன் நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 709 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)

## தாமதத்தால்...

என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தீர்மானம் எடுப்பதற்கு தாமதிக்கப்படுகின்றமை நாட்டை முழுமையான முடக்கத்துக்குக் கொண்டு செல்லும் என்று அந்தச் சங்கத்தின் உப செயலாளர் நவின் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான இயலுமை தற்போதும் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பொலிஸாக...

திக் கொண்டவர்களால் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகர் மற்றும் தேக்கவத்தை ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளுக்குச் சென்ற இனந்தெரியாதவர்கள் இந்தக் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு 30 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீடுகளுக்குச் சென்ற இனந்தெரியாதவர்கள் தங்களைப் பொலிஸார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளனர். அதன்பின்னர் வீட்டைச் சோதனை செய்வது போன்று பாசாங்கு செய்துவிட்டு இரு வீடுகளில் இருந்த நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-110)

## 35 கிலோ...

சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, காங்கேசன்துறைக் கடலில் மிதந்த 180 கிலோ கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக கஞ்சாவைத் தீயிட்டு அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-26)

## இலங்கைக்கு...

**யாகியுள்ளது. சீனப் பாதுகாப்பு அமைச்சர் கடந்த வாரம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டதுடன் ஜனாதிபதி மற்றும்** பிரதமர் உள்ளிட்ட தரப்புகளுடன் உயர்மட்ட சந்திப்புகளையும் நடத்தியிருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சரும் கொழும்பு வரவுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் இவர் சந்திப்புகளை நடத்துவார் எனவும், இரு தரப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. **அத்துடன் கொழும்பு துறைமுக நகர் திட்டம் பற்றியும் அவரின் பயணத்தின்போது அவதானிப்புகள் இடம்பெறக்கூடும்.**

**அதேவேளை, சீன கம்யூனிஸ் கட்சியின் உயர்மட்ட பிரமுகர் யெங் ஜியேச்சி கடந்த ஒக்ரோபர் மாதம் உயர்மட்ட குழுவுடன் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-44)**

## போலி 1000...

8 லட்சத்து 10 ஆயிரம் நாணயத் தொகையுடைய போலி நோட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய இந்தக் கைது நடவடிக்கை நடந்துள்ளது.

போலி நாணயத் தாள்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## வடக்கு...

இந்த விடயத்தில் துறைசார் அனுபவம் கொண்ட எந்திரி சுகததாச கொன்கலலியனகே சிரேஷ்ட அதிகாரியாகவும், கீதநாத் காசிலிங்கம் மற்றும் கொடவெல முதியன்செலாகே யஸ்ரங்க கொடவெல ஆகியோர் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நிறைவேற்று அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அமைச்சின் செயலர்களுக்குரிய அதிகாரங்களைக் கொண்டிருப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் செயலணி கிராமிய அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுடன் இயங்கும். இந்தச் செயலணி வடக்கு, கிழக்கு அபிவிருத்திகளை மேற்கொள்ளல், துரிதப்படுத்தல் போன்ற பல விடயங்களைக் கையாளும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் செயலணியில் உள்வாங்கப்பட்டுள்ள தமிழரான கீதநாத் காசிலிங்கம் பிரதமர் மஹிந்த் ராஜபக்சவின் ஒருங்கிணைப்புச் செயலராகவும் பணியாற்றுகின்றார்.

2009ஆம் ஆண்டு உள்நாட்டு மோதல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோதும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 409 குடும்பங்கள் இன்னமும் மீள்குடியமர்த்தப்படாது நலன்புரி நிலையங்களில் உள்ளன. நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் 3 ஆயிரத்து 139 குடும்பங்களைச் சேர்ந்தோர் வாழ்கின்றனர். வெடிபொருள்கள் அகற்றப்படாது இன்னமும் 14 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதி உள்ளது. மீள்குடிமர்த்தப்படாதுள்ள குடும்பங்களை மீள் குடியமர்த்த வேண்டியுள்ளது. மீள்குடியேற்றத்துக்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபாவும், அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஆயிரத்து 435 ரூபாவும் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மீள்குடியமர்வு தொடர்பான திட்டம் மாவட்டச் செயலர் மற்றும் பிரதேச செயலர் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். **இரண்டு ஆண்டுகாலத்துக்குள் இந்தத் திட்டம் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்று கிராமிய அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ச சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.** (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவுக்குள் அரசியல் வேண்டாம்

## கட்டுப்படுத்த சகலரும் ஒத்துழையுங்கள் பிரதமர் மஹிந்த பகிரங்கமாக அழைப்பு



**கொழும்பு, மே 4**
**'நாட்டின் தேசிய பேரிடர் எனக் கருதி கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். அபாயகரமான இந்தச் சூழ்நிலையில் அரசியல் இலாபம் பெறும் வகையில் சிலர் செயற்படுவது பொருத்தமற்றது இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.**

மக்கள் சரியான முறையில் சுகாதார வழிக்காட்டல்களைப் பின்பற்றுவது மிகவும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
'சிலர் அரசியல் பேதங்களை அடிப்படையாகக்கொண்டு புள்ளிகளைப் போட்டுக்கொள்ளும் வகையில் செயற்படுகின்றனரே அன்றி, கொரோனாப் பரவலை கட்டுப்படுத்த உதவ வேண்டும் என்பது அவர்களின் உண்மையான நோக்கமல்ல என்பது தெளிவாகியுள்ளது.
இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் சிலர் விமர்சித்து வருகின்றனர். இந்த விமர்சனங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, நாடு மற்றும் மக்களுக்காகக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தால் அது எவருக்கும் முன்னுதாரணமாக அமையும்.
நாட்டில் இப்படியான பிரச்சினை ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலையில், அரசியல் இலாபம் பெறும் வகையில் சிலர் செயற்படுவது பொருத்தமற்றது. இப்படியான ஆபத்தான சந்தர்ப்பத்தில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த இரவு, பகல் பாராது அர்ப்பணிப்புடன் செயற்படும் எமது மருத்துவர்கள், சுகாதார அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர், பொலிஸ் அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் சேவை அனைவருக்கும் முன்னுதாரணம்.
அதேபோல் மக்களும் சுகாதார ஆலோசனைகளை சரியான முறையில் பின்பற்ற வேண்டும். இது அரசியல் நோக்கங்களுக்காகச் செயற்படும் நேரமல்ல' - என்றார்.

(ம-22)



## தனிமைப்படுத்தலில் நில்தண்டாஹின்ன

ஹற்றன்,மே 4
நுவரெலியா வலப்பனை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட நில்தண்டாஹின்ன கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று வலப்பனை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.
நில்தண்டாஹின்ன கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 4 பகுதிகள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் பலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.
வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நில்தண்டாஹின்ன முடக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் இருந்து வெளியேறுவதற்கும், நபர்கள் உள்ளே வருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ம-4)




## திருகோணமலையில் கொவிட் விழிப்புணர்வு

திருகோணமலை, மே 4
திருகோணமலை மாவட்டத்தில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இதன்படி நேற்று திருகோணமலை பட்டினமும் சூழலும், தம்பலகாமம் மற்றும் மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமங்களில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
அகம் மனிதாபிமான வள நிலையம் அமைப்பு, திருகோணமலை மாவட்டச் செயலகம் மற்றும் திருகோணமலை பிராந்திய சுகாதார திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த விழிப்புணர்வு செயற்றிட்டத்தை முன்னெடுத்தது. (ஜ-40)

## வாகனங்கள் வெளியேறும் பகுதி மாற்றம்

கொழும்பு,மே 4
மத்தளவிலிருந்து தெற்கு அதிவேக வீதியூடாக கொழும்புக்குச் செல்லும் வாகனங்கள் கஹாதுடுவ வெளியேறும் பகுதியால் வெறியேற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கொட்டாவ, அத்துருகிரிய, கொத்தலாவல மற்றும் கடுவலை ஆகிய வெளியேறும் இடங்களில் பணியிலிருந்த ஊழியர்கள் கொவிட்19 தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதனால் வாகனங்கள் வெளியேறும் பகுதி மாற்றப்பட்டுள்ளது. எனவே மத்தளவிலிருந்து தெற்கு அதிவேக வீதியூடாக, கட்டுநாயக்க நோக்கிச் செல்லும் அனைத்து வாகனங்களும், போக்குவரத்துக் கட்டணத்தை செலுத்திவிட்டு கஹாதுடுவ வெளியேறும் பகுதியால் வெளியேற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## விற்பனை நிலையங்களை மூடுமாறு அறிவுறுத்து

திருமலை, மே 4
திருகோணமலையில் அத்தியாவசிய விற்பனை நிலையங்கள் தவிர்ந்த, ஏனைய விற்பனை நிலையங்களை மூடுமாறு திருகோணமலை நகரசபை அறிவித்துள்ளது.
திருகோணமலை மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்றது. எனினும் வெளியூரில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக அதிகளவான மக்கள் வருகை தருகின்றனர். இதனூடாக தொற்று அதிகரித்து வருகின்றது. அதனால் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த அனைத்து கடைகளையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு திருகோணமலை நகரசபை வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
(ம-4)

## தனிமை மீறல்: 215 பேர் கைது!



கொழும்பு, மே 4
தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 215 பேர் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 4 ஆயிரத்து 857 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-இ)



திருகோணமலை மூதூரில் பொருளாதாரம் நலிந்த குடும்பம் ஒன்றுக்கு அல்ஹித்மத்துல் உம்மா நிறுவனத்தின் நிதியுதவியில் புதிய வீடொன்று அமைத்துக் கொடுப்பதற்காக அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. குறித்த வீட்டுக்கான அடிக்கல்லை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் நட்டார். (ச)

## திருகோணமலையில் 9 கிராமங்கள் முடக்கம்

திருமலை, மே 4
திருகோணமலையில் இதுவரை 9 கிராமங்கள் முழுமையாக முடக்கப்பட்டுள்ளன. இங்கு மூன்றாம் அலையில் 500க்கும் மேற்பட்டோர் இதுவரை கொரோனாத் தொற்றாளர்களாகப் பதிவாகியுள்ளனர்.
கடந்த 30ஆம் திகதி கந்தசாமி கோயில் பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் உயிரிழந்தார். இதனையடுத்து முதலாவதாக முடக்கப்பட்ட பூம்புகார் கிராமத்தைத் தொடர்ந்து, அதனுடன் தரைவழித் தொடர்புடைய கோவிலடி கிராம சேவகர் பிரிவு மற்றும் மட்கோ கிராம சேவகர் பிரிவு மற்றும் இலிங்கநகர் கிராம சேவகர் பிரிவு ஆகியவை உள்ளடங்களாக 7க்கும் மேற்பட்ட கிராமங்கள் முடக்கப்பட்டிருந்தன.
அத்துடன் மே முதலாம் திகதி மாலையில் இருந்து அன்புவழிபுரம் கிராம சேவகர் பிரிவு மற்றும் உவர்மலை கிராம சேவகர் பிரிவு என்பவை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் முடக்கப்பட்டுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளை, சுகாதாரத் திணைக்களத்தினர் மற்றும் இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து நிறைவேற்றி வருகின்றனர். (ம-4,40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு கொத்தணிக்கு அரசே வாய்ப்பு வழங்கியது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு



**கொழும்பு, மே 4**

**நாட்டில் மீண்டுமொரு கொரோனாக் கொத்தணி உருவாகுவதற்கு அரசே மக்களுக்கு வாய்ப்பு வழங்கியது. தொற்றுப் பரவலடையும் என்று எச்சரிக்கப்பட்டும் கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.**

புத்தளம் மதுரங்குளி பிரதேசத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்ட வைரஸுக்கு நிகரான உருமாறிய கொரோனா வைரஸ் எமது நாட்டில் பரவி வருகின்றது என்று சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த மாதம் 8ஆம் திகதி அரசுக்கு அறிவித்திருந்தனர்.

ஆனால் அரசு இந்த வைரஸின் பயங்கரத் தன்மையைக் கண்டுகொள்ளாது. தமிழ் -சிங்கள புத்தாண்டுக் காலப்பகுதியில் எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் மக்கள் செயற்படுவதற்கு இடமளித்திருந்தது. இதனால் கடைத்தெருக்களில் மக்கள் கூட்டம் கூட்டமாகப் பொருள்களைக் கொள்வனவு செய்து வந்தனர். அதேபோன்று கதிர்காம யாத்திரையில் நாலா பக்கத்தில் இருந்தும் சென்ற மக்கள் அங்கு அலைமோதினர். நுவரெலியாவில் இடம்பெற்ற வசந்தகாலக் கொண்டாட்டங்களும் எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் இடம்பெற்றன. கொவிட் தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் எதனையும் பின்பற் றாது, புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் மக்கள் ஈடுபட்டு வந்தனர். அதனால் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் கொவிட் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றனர். பேலியகொட, பிரண்டிக்ஸ் மற்றும் சிறைச்சாலைக் கொத்தணி என்பவை போன்று தற்போது அரசின் புதிய கொத்தணி உருவாகி இருக்கின்றது. இந்த நிலைக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும். அதேவேளை இந்தியர்களுக்கு எமது நாட்டில் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களை ஏற்பாடுசெய்து, அதற்கு பல்வேறு கட்டணங்களில் பெக்கேஜ்களை அறிமுகம் செய்துள்ளது.

அரசு பணத்துக்காக கொவிட் தொற்றுக்குள்ளான இந்திய பிரஜைகளை ஹொட்டல்களிலும், விடுதிகளிலும் தங்கவைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால் புத்தளம் போன்ற பிரதேசங்களுக்கு கடல் மார்க்கமாகவும் இந்திய பிரஜைகள் வருகின்றனர். அதனால் தற்போது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது- என்றார். (ம-4)

# தேர்தல் முறைமை மாற்றத்தால் சிறுபான்மையினருக்கே பாதிப்பு!

## வேலுகுமார் தெரிவிப்பு

நாட்டில் புதிய தேர்தல் முறை மாற்றம் தொடர்பாக கலந்துரையாடல்கள் ஆரம்பித்துள்ளன. முன்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கான முறைமையாக மட்டும் இதனை நோக்க முடியாது. மாகாண சபைத் தேர்தலுடன், இனிவரும் பொதுத்தேர்தலுக்கான தேர்தல் முறையும் இதனுடன் தொடர்புபடுகின்றது. இந்த மாற்றங்களால், தமிழ் பேசும் சிறுபான்மை சமூகம் பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது.

மறுபக்கம் பெரும்பான்மை சமூகத்திலுள்ள நாட்டின் சிறு கட்சிகளும் அதே சவாலுக்கு உள்ளாகின்றன இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல் முறைமை மாற்றம் ஜனநாயக ரீதியான வெளிப்படுத்தல்களுக்கு தடையான ஒன்றாக அமைவதற்கு இடமளிக்கக்கூடாது. நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கலப்பு முறையில், தொகுதி வாரியாக 60 வீதம், விகிதாசார அடிப்படையில் 40 வீதம் என்ற அடிப்படையில் நடைபெற்றது. இன்று மாகாண சபைத் தேர்தலுக்கு, அதே அடிப்படையில் 70 வீதத்துக்கு 30 வீதம் என்பது முன்மொழியப்பட்டுள்ளது. இதனை பல பெரும்பான்மை கட்சிகள் ஏற்றுக்கொண்டும் இருக்கின்றன. ஆனாலும் இத்தகைய ஒரு முறையிலே ஏற்படும் விளைவுகள் தொடர்பாக பெரும்பான்மைக் கட்சிகள் இடையில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

இந்தச் சூழ்நிலையை நாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விகிதாசார தேர்தல் முறையை தக்கவைத்துக்கொள்வதற்கு கோட்பாட்டு ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் தமிழ் முற்போக்கு கூட்டணி, தலைவர் மனோ கணேசனின் தலைமையில் விகிதாசார தேர்தலை, வளைய முறையில் நடத்துவதற்குரிய முன்மொழிவுகளை செய்திருக்கின்றது. என்றுள்ளது. (ம-4)

# பொலிஸாரைத் தாக்க முற்பட்ட சந்தேகநபர் மீது துப்பாக்கிச்சூடு

கண்டி, மே 4

பொலிஸாரைக் கோடரியால் தாக்க முற்பட்ட சந்தேகநபர் மீது, பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் சந்தேக நபரொருவர் காயமடைந்துள்ளார் இந்தச் சம்பவம் தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகன ஹம்பகாவத்தப் பகுதியில் நடந்துள்ளது.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சிலர் அந்தப் பகுதியில் தங்கியுள்ளனர் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததை அடுத்து, சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காக பொலிஸ் குழுவொன்று அந்தப் பகுதிக்குச் சென்றது. இதன்போது அங்கிருந்த சந்தேக நபரொருவர் கோடரியால் பொலிஸாரைத் தாக்க முற்பட்டுள்ளார். பின்னர் பொலிஸார் குறித்த சந்தேகநபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

காயமடைந்த நபரை பொலிஸார் கைது செய்தனர். சிகிச்சைக்காக அவரை கண்டி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கிருந்த மேலும் நான்கு சந்தேகநபர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

சந்தேகநபர்கள் தெல்தெனியா மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் போதைப்பொருள் கடத்தல்கள், கால்நடைக் கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் சிறைச்சாலையில் இருந்து தப்பி வந்தவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ம-4)

# கொரோனா சிகிச்சைகளுக்காக ஆயுள்வேத மருத்துவமனைகள்

கொழும்பு, மே 4

கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, ஆயுள்வேத மருத்துவமனைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார் என்று இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவிவரும் நிலையில், தொற்றாளர்களின் அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# இணையக் கல்வி மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, மே 4

பாடசாலைகள் மூடப்பட்டிருக் கும் காலப்பகுதியில், இணையத் தளத்தின் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு மீண்டும் தீர்மானித்துள்ளது. அதற்கமைய ஈ தக்சலா, குருகெதர வேலைத் திட்டங்களின் மூலமாக மாணவர்கள் பயனடைய முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டதன் பின்னரும், குறித்த வேலைத் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெ டுக்கப்படும்.

அதேவேளை பாடவிதானங்களைப் பூர்த்தி செய்யும் வகையில், எதிர்வரும் ஓகஸ்ட் மாத விடு முறையை மட்டுப்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4)

# காசோலை மோசடி: நான்கு பேர் கைது

காசோலை மோசடி தொடர்பில் சந்தேகநபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போலியான காசோலைகளைப் பயன்படுத்தி தனியார் வங்கியொன்றில் இருந்து 43 மில்லியன் ரூபா பணத்தை இவர்கள் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனியார் இரும்புக் கம்பி உற்பத்தி தொழிற்சாலை ஒன்றின் பெயரில் சந்தேகநபர்கள், குறித்த போலிக் காசோலையைத் தயாரித்து பணம் பெற்றுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் (Accountant) ஒருவர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்பு: 071 415 0995
076 103 7060

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உரும்பிராய் கோப்பாய் வீதியில், மெயின் றோட்டுமுகப்புடன் $1\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (கோப்பாய் வீதி, கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமை)

077 623 4204, 077 225 9798, 076 300 1654

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூ... ...த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04. 05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.